# தாளையடிக் கடலில் வலைகளை அறுக்கிறதாம் கூட்டுத்தாபன கப்பல்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா

வாரப்பதிப் ; மாத்திரம்

மூன்று மாதம் — ரூ. 4-00

ஆறு மாதம் — ரூ. 7-50

ஒரு வருடம் — ரூ. 14-00

முற்பணம் கட்ட வேண்டும் தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு

EELANADU

மலர் 11

தபால்பெட்டி எண்: 49 இதழ்: 38

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 7 முஹறம் 1 வியாழக்கிழமை 20-3-69

ஈழநாடு சந்தா

தினப் பதிப்பு

மூன்று மாதம் — ரூ. 18-00

ஆறு மாதம் — ரூ. 34-00

ஒரு வருடம் — ரூ. 66-00

## மீனவர்படும் அவஸ்தைபற்றி எம்.பி.புகார்

வல்வெட்டித்துறை, புதன் மீன்பிடி கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கப்பல் ஒன்று வடமராட்சிக் கிழக்கு கரையோரப் பகுதியிலுள்ள சுண்டிக்குளம் தாளையடிக் கடலில் கரையோரமாக வந்து அங்குள்ள மீனவர்களின் வலைகளை அறுப்பதிலும் மீனவர்களை பயமுறுத்துவதிலும் ஈடுபட்டுள்ளதாம்.

கடந்த வாரம் இக்கப்பல் கரையோரமாக வந்து செல்லத்தம்பி என்பவருக்கு சொந்தமான வலைகளை அறுத்த எறிந்து சேதப்படுத்தியும் சில மீனவர்களை விளையாட்டுக்காக பயமுறுத்தியும் வருகிறது. இதனல் இப்பகுதி மீனவர் கடலில் சென்று தொழில்செய்ய பயந்துகொண்டு வருகிருர்களாம். இதுசம்பந்தமாக இப்பகுதிமீனவர்பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினத்திற்கு முறையிட்டதைத் தொடர்ந்து எம். பி., மீன்பிடி கூட்டுத்தாபனத் தலைவருக்கும், டைரக்டருக்கும், கடற்படைத் தளபதி திரு. கதிர்காமருக்கும் புகார் செய்தார். இதன் மீது அவர்கள் உடன் விசாரணை செய்வதாக எம். பி.க்கு தந்தி மூலம் அறிவித்துள்ளனர்.

முன்பு மீன்பிடி கூட்டுத்தாபனத் தலைவர் திரு. கே. எம். பி. இராஜரத்தினவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி அக் கப்பல்கள் கரையிலிருந்து 40 பாகத்திற்குள் செல்லக் கூடாதென உத்தரவிடப்பட்டிருந்ததாம் இவர்கள் இதனையும் பொருட்படுத்தாது கரைக்கு வருவதாக தெரியவருகிறது.

## இராமப்புறங்களில் கலை வளர அரசாங்கம் உதவவேண்டும்

### யாழ். மேயர் வேண்டுகோள்

குரும்பசிட்டி, புதன் 'சமூக வாழ்வுக்கு முன்னேற்றத்துக்கு அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்கள் ஆற்றும் பணிகள் மட்டும் போதாது. மக்கள் மன்றங்கள் மூலம் சமுதாயத்திற்கு தேவையான சேவைதொண்டுகளைப் புரிந்து மக்கள்முன்னேற்றத்தை உயர்வடைய செய்தல் வேண்டும். சமூக கலைத்துறைகளில் தொண்டாற்றுவோருக்கு பலவித இடையூறுகள் நேரிடும், மக்கள் ஆதரவைப் பயன்படுத்தி அன்புவழியில் மக்களுக்கு பணியாற்றவேண்டும்.'

குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையத்தினரின் நாடகப் போட்டியின் இறுதிநாள் விழாவுக்கு தலைமை வகித்து பேசுகையில் யாழ் மேயர் திரு. எஸ். நாகராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குரும்பசிட்டி மகாதேவா வித்தியாசாலை மண்டபத்தில் விழா நடைபெற்றது.

திரு நாகராசா மேலும் கூறியதாவது:

நகரப் புறங்களில் கலைத்துறை வளர்ச்சிக்கு பலவித உதவிகள் கிடைக்கின்றன. திறந்தவெளிஅரங்கு போன்றவை அங்கு இருக்கின்றன. ஆனல் கிராமப் புறங்களில் இத்தகைய வாய்ப்புகள் கிடைப்பதில்லை அரசாங்கம் கிராமப்புறங்களிலும் கலைத்துறை முன்னேற வேண்டிய வசதிகளை வழங்கவேண்டும். எமது நாட்டில் சினிமாவின் தாக்குதல் இருக்கின்றபோதிலும் தமிழ் நாடகத்துறை பெரிதும் வளர்ச்சி பெற்றுள்ளது

வழக்கறிஞர் எம். ஆலாலசுந்தரம், மயிலிட்டி கிராம சபைத் தலைவர் திரு. வ. கிருஸ்ணசாமி, ஆசிரியர் எஸ். செல்லத்துரை. ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

# 'இங்குவாழ தகுதியானேரும் கள்ளத்தோணிகளாகிருர்கள்

## புரியாத மொழியில் எழுதி கையொப்பம் பெறும்அநீதி'

### பிரதமருக்கு பண்டிதர் கடிதம்




கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் எண்பது வயது நிறைவு விழாவில் கலந்து கொண்ட தமிழகத்தின் பிரபல சினிமா - நாடக நடிகர் திரு. டி. கே. பகவதி உரை நிகழ்த்துகையில் எடுத்தபடம்.

படப்பிடிப்பு-ஏ. வி. எம்.

யாழ்ப்பாணம், வியாழன்


கள்ளக்குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படுகின்றவர்கள் குறிப்பிடும் சாட்சிகளை விசாரித்து அவர்களுக்குத் தெரியாதமொழியில் பதியப்படும்வாக்குமூலத்தில் கையெழுத்திடும்படி வற்புறுத்துவது நியாயமாகுமாவென்று கேட்டு கிளிநொச்சி எம். பி. பண்டிதர் இரத்தினம் பிரதம மந்திரிக்கு காரசாரமாக ஒரு கடிதம் வரைந்திருக்கின்ருர். சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் குறிப்பிடும் சாட்சிகளை விசாரிக்கும் பொலிசார் அவர்களுக்குப் புரியாத மொழியில் சாட்சியங்களைப் பிழையாகப் பதிகிருர்கள் என்பதற்கு போதிய ஆதாரம் இருப்பதாகவும் பண்டிதர் இரத்தினம் சுட்டிக்காட்டியிருக்கிருர்.



களை விசாரித்த பொலிஸ்காரர் இவர்களுடைய வாக்குமூலத்தைச் சரியாக எழுதவில்லை என்பதை [illegible] றது. [illegible] மூலம் சரியாகப் பதியப்பட்டு, குடிவரவு குடியகல்வு [illegible]ருக்கு ஆளாகின்றன.

எனவேபோதிய விசாரணையின் பின்னரே தடுப்பு முகாமுக்கு அனுப்புமாறு பணிப்பதுதான் நீதியும் நியாயமுமாகும்.

சட்டவிரோதக் குடியேற்



சகல துறைகளிலும் சிறந்த வீரர் எனப் பரிசு பெற்ற சென்ஜோன்ஸ் கல்லூரிக் கோஷ்டிகாப்டன் சுரேந்திரன் பரிசு பெறுகிருர்.

படப்பிடிப்பு- ஏ.வி.எம்.



## 'ஆட்சி மன்ற பெண்கள் உள்ளூர்சேலைகளே அணிகிருர்கள்'

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 7-ம் திருவிழாவாகிய இன்று மாலை 6 மணிமுதல் இரவு 7-30 மணி வரை பிரம்மஸ்ரீ சிவ வை. நித்தியானந்த சர்மாவால் கம்பராமாயணத் தொடரில் 'சீதாகல்யாணம்'' என்னும் பொருள் பற்றிய பிரசங்கமும், இரவு 7-30 மணிக்கு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

...விழாவில் கலந்து கொண்ட தமிழகத்தின் பிரபல சினிமா - நாடக நடிகர் திரு. டி. கே. பகவதி உரை நிகழ்த்துகையில் எடுத்தபடம்.

படப்பிடிப்பு-ஏ. வி. எம்.

## 'ஆட்சி மன்ற பெண்கள் உள்ளூர்சேலைகளே அணிகிறார்கள்'

### என்கிறார் பருத்தித்துறை எம். பி.

வல்வெட்டித்துறை, புதன்

இலங்கை ஆட்சிமன்ற பெண்கள் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எல்லோரும் இங்கு உற்பத்தியாகும் குறைந்த விலையிலுள்ள கைத்தொழில் துணிகளையே அணிந்துவருகிறார்கள். இதனால் வெளிநாட்டு துணிகளை அணிய விரும்புபவர்களுக்கு இது ஒரு முன்மாதிரியாக இருக்கிறது என பருத்தித்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கே துரைரத்தினம் பருத்தித்துறை நெல்லண்டை நெசவுநிலைய 2-வது ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

நெசவுநிலைய மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு திரு. எஸ். எம். கந்தசாமி தலைமைவகித்தார்.

திரு. துரைரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: இந்த நாட்டில் உணவுக்கும், உடைக்குமாக பெருமளவு பணம் வெளிநாட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. இவற்றை இங்கு உற்பத்தி செய்வதன் மூலம் நாம் பொருளாதாரத்தில் அபிவிருத்தியடைய ஏதுவாக இருக்கிறது. முற்காலத்தில் பருத்தித்துறைக்கு ஊடாகவே பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டது.

பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. என். நடராசா பேசுகையில் கூறியதாவது:

பருத்தித்துறையில் இருக்கும் ஒரு நெசவு நிலையமான இது இரண்டுவருட காலத்துக்குள் இவ்வளவு முன்னேற்றம் அடைந்திருப்பதையிட்டு நகரசபைத் தலைவர் என்ற முறையில் பெருமையடைந்து வருகிறேன். நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாக நின்று உற்பத்தியை பெருக்க முயற்சிசெய்து வரவேண்டும்.

திரு. கந்தவனம் பேசுகையில் இங்கு வேலைசெய்து வரும் மாணவர்களின் உழைப்பைக்கண்டு தாம் மிகவும் சந்தோஷப்படுவதாகத் தெரிவித்தார்.

கிராமமுன்னேற்றச் சங்க மேற்பார்வையாளர் வி.கே சுப்பிரமணியம், காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் உட்பட வேறுபலரும் பேசினர்.

## 'தமிழ் சர்வகலாசாலைக்கு திருமலை சிறந்த இடம்'

### அமிர்தலிங்கம் கூறுகிறார்

யாழ்ப்பாணம், வியா.

எல்லா மதத்தையும் தழுவிய தமிழர் ஒருங்குசேர்ந்து கல்வி கற்கவாய்ப்புள்ள ஒரு தமிழ் சர்வகலாசாலையை சமூக அடிப்படையில் திருகோணமலை போன்ற சிறந்த இடம் வேறில்லை. கிழக்கு வடக்கு மலைநாட்டுத் தமிழ் மாணவர் சந்தித்துக் கலந்து கல்வி பயில திருக்கோணமலை ஒரு சிறந்த மையமாகும்.

அங்குள்ள நிலவசதி நீர்வசதி, அழகிய இயற்கைத் துறைமுகம் ஆகியன எம் கூற்றுக்கு உறுதுணையாகும். எனினும் திருகோணமலை வைத்திய நிலையம் இன்னும் பூரணத்துவமடையவில்லையாகையால் சர்வகலாசாலையின் மருத்துவத் துறையை யாழ்ப்பாணத்திலும் ஏனையவற்றைத் திருமலையிலும் நிறுவுதல் பொருத்தமானது.

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு ஏ. அமிர்தலிங்கம்ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர் உயர்தர மாணவர் முன்னிலையில் கல்விப் பிரச்னைகள் எனும் விஷயம் பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரிய மன்றத் தலைவர் திரு. பொ. நாகரத்தினம் தலைமையில் நடைபெற்றது. (ந. நி)

### புதிய தூதுவர்கள்

கொழும்பு புதன்

இலங்கையில் பின்லாந்து தூதராக நியமிக்கப்பட்ட திரு. பிரெடெறிக் வில்கெம் சிறெக் செவ்வாய்யன்று காலை தனது நியமனப் பத்திரங்களை மகா தேசாதிபதியிடம் இராணி மாளிகையில் சமர்ப்பித்தார்.

...பதற்கு போதிய ஆதாரம் இருப்பதாகவும் ... சுட்டிக்காட்டியிருக்கிறார்.



சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்று பிடிபட்டவர்களுக்கு சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட மு. கந்தையா, ப. முத்துலிங்கம் ஆகியவர்களின் முறைப்பாட்டை எம். பி. தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். திரு. இரத்தினம் எம். பி. யின் கடிதத்தின் முழுவாசகம் பின்வருமாறு:

தெரியாத மொழியில் எழுதியதற்குக் கைஒப்பம் இடுமாறு வற்புறுத்தல் நீதியா? நியாயமா? இந்த நாட்டின் சொந்த மொழிகள் இரண்டில் ஒன்றான தமிழைத்தாய் மொழியாகக் கொண்டவர்களை விசாரித்து வாக்குமூலங்களைப்பதியும்பொழுது அவர்களுக்குத்தெரிந்த தாய் மொழியில் பதிதற்குக்கூட உங்கள் அரசாங்கம் ஒழுங்கு செய்யக்கூடாதா? தெரியாத மொழியில் எழுதப்பட்ட வாக்குமூலத்துக்குக் கையொப்பம் இடுமாறு கேட்டலும், ஏன் நெருக்குதலும், நியாயமா? நீதியா? கையொப்பம் இடமறுக்கலாமே என்று சிலர் இலகுவிற்கேட்கலாம். பொலிஸ்காரரர் அதிகாரத்துடன் கேட்கும்பொழுது 'கள்ளத்தோணி' எனப் பிடித்து அடைக்கப்பட்டவரை விடுவித்தற்கு வாக்குமூலம் கொடுக்கும்பொழுது மக்கள் மறுப்பார்களா? உங்கள் அரசாங்கம் தமிழில் வாக்குமூலம் பதியத்தக்கவர்களை அனுப்பி விசாரித்தால் இந்தக் கொடுமை நடைபெறாது. உங்கள் அரசாங்கம் இந்த நியாயமான கடமையைச் செய்ய இனியாகுதல் வழிவகுக்குமா?

அடைக்கப்பட்ட சட்டவிரோதக் குடியேற்றக்காரரர் குறிப்பிடும் சாட்சிகளை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களைப் பதியும் பொலிசார் வாக்குமூலம் கொடுப்போருக்குத் தெரியாத மொழியில் பிழையாக வாக்குமூலத்தைப் பதிகிறார்கள்என்றுசந்தேகம்கொள்ள போதிய ஆதாரங்கள் உள.

மாணிக்கம் சின்னப்பன் (பரந்தன் 4,ம் வாய்க்கால்) என்பவரின் சாட்சிகளாகிய மு. கந்தையா, ப. முத்துலிங்கம் என்போருடைய இந்த முறைப்பாடு இவர்களை விசாரித்த பொலிஸ்காரர் இவர்களுடைய வாக்குமூலத்தைச் சரியாக எழுதவில்லை என்பதை நிறுவுகின்றது. இவர்களுடைய வாக்குமூலம் சரியாகப் பதியப்பட்டு, குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளருக்கு அனுப்பப்பட்டிருந்தால் அவர் மாணிக்கம் சின்னப்பனை இந்தியாவுக்கு அனுப்ப முடிவுசெய்திருக்கமாட்டார் எனவே இவர்களுடைய வாக்குமூலம் எவ்வாறு எழுதப்பட்டதென்பதைஉடனே விசாரித்து உண்மை நிலைமையை அறிவிக்குக.

இலங்கையில் 1948-ம் ஆண்டுதொடக்கம் தொடர்ந்து நாடற்றவர்களாக வாழ்ந்து வருபவதற்குப் போதிய சான்றுகளும் அரி



சிப் பங்கீட்டுப் புத்தகம் உள்ளவர்களையும் முன்னர் பிடித்து விசாரித்து விடுதலையாக்கப்பட்டவர்களையும் போதிய விசாரணையின்றித் திடீரெனப் பிடித்துத்தடுப்பு முகாமில் அடைத்துத் துன்புறுத்துவது நீதியாகாதுஎன 26-2-69-ல் நான் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு எழுதியிருந்தேன். உங்களுக்கும் அக்கடிதத்தின் பிரதி அனுப்பியிருந்தேன்.

முன்னர் பொலிசார் பிடித்து விசாரித்துப் போதிய சான்றுகள்இருப்பின்உடனே விடுதலை செய்தும் சான்றுகள் இல்லாவிடின் தடுப்பு முகாமுக்கு அனுப்பியும் வந்தார்கள். ஆனால் இப்பொழுது குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளரின் கட்டளைப்படி பொலிசார் திடீரெனப் பிடித்து எவ்வித விசாரணையும் செய்யாது தடுப்பு முகாமுக்கு அனுப்புகின்றனர். இதனால்நாடற்ற மக்கள் பலரின் குடும்பங்களும் சொல்லொணாத் துயருக்கு ஆளாகின்றன.

எனவேபோதிய விசாரணையின் பின்னரே தடுப்பு முகாமுக்கு அனுப்புமாறு பணிப்பதுதான் நீதியும் நியாயமுமாகும்.

சட்டவிரோதக் குடியேற்றக் காரரைப் பிடித்து அடைத்து வெளியேற்றுவது தீவிரமாகச் செய்யவேண்டியதே ஆனால் இங்கு தொடர்ந்து வாழத்தகுதியுடைய நாடற்றவர்களைத் துன்புறுத்துவது நீதியாகாது. எனது தொகுதியில்இருந்துபோதிய சான்றுகளும் அரிசிப்பங்கீட்டுப்புத்தகங்களும் உடையவர்கள் போதிய விசாரணையின்றித் தடுப்பு முகாமுக்கு அனுப்பட்டுத்துன்பம் அடைந்தனர். நாராயணன்இராமு மாணிக்கம் சின்னப்பு, சுப்பையா வையிரமுத்து எனும் இவர்கள் போதிய விசாரணையின்றிப் பிடித்தடைக்கப்பட்டார்கள்.

பிடித்து அடைப்பதற்கு முன் விசாரணை செய்து போதிய சான்றுகள் காட்டாதவர்களையே பிடித்து அடைக்குமாறு இதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களைப் பணித்தால் ஏழை குடும்பங்கள் பலவற்றைப் பட்டினியிலிருந்து காப்பாற்றலாம்.



யாழ்ப்பாணத்தின் பெரிய கிரிக்கட் போட்டியான சென்றல் சென்ஜோன்ஸ் கிரிக்கெட் போட்டியில் சிறந்த பந்துதடுப்பு வீரர் என்று பரிசு பெற்ற சென்றல் கோஷ்டி காப்டன் புரட்சிதாசன் திருமதி பூரணம் பிள்ளையிடம் பரிசு பெறுகிறார்.

...விழாவாகிய இன்று மாலை 6 மணிமுதல் இரவு 7-30 மணி வரை பிரம்மஸ்ரீ சிவ வை. நித்தியானந்த சர்மாவால் கம்பராமாயணத் தொடரில் 'சீதாகல்யாணம்'' என்னும் பொருள் பற்றிய பிரசங்கமும், இரவு 7-30 மணிக்கு வசந்த மண்டப பூஜையும், சுவாமி ஆட்டுக் கடாவாகனத்தில் வீதிவலம் வருதலும் நடைபெறும்.

### பரீட்சைத் தரத்தைக் குறைக்கக் கோருவர்

கொழும்பு புதன்

பிரதம மந்திரியை விரைவில் சந்திக்கவிருக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் அரசங்க ஊழியர்களுக்கு நடாத்தப்படும்சிங்களத்தேர்ச்சிப் பரீட்சை கடினமாக விருப்பதால் அதன்தரத்தைக்குறைக்குமாறு பிரதமரைக் கேட்கப்போவதாக டாக்டர் நாகநாதன் அறிவித்துள்ளார்.

## மத்திய அரசாங்கத்துக்கு கச்சதீவு முடிவுபற்றி கருணாநிதி விடுத்த வேண்டுகோள்

சென்னை, மார்ச் 19

கச்சதீவு சம்பந்தமாக எந்தவிதமான முடிவையும் எடுக்கமுன்னர் தமிழ்நாடு அரசாங்கத்துடன் கலந்தாலோசிக்குமாறு தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி, மத்திய அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டுள்ளார். புதுடில்லியில் 2 நாள் விஜயத்தை மேற்கொண்டுவிட்டு இன்று சென்னை திரும்பிய திரு. கருணாநிதி பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் இதைத் தெரிவித்தார்.

மத்திய அரசாங்கத்துடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தை மிகவும் நம்பிக்கை அளித்துள்ளதாகத் தெரிவித்த முதலமைச்சர் அடுத்த மாதம் 17ம் திகதி வட ஆற்காடு, செங்கற்பட்டுக்கு விஜயம் செய்யவிருக்கும் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி வரட்சியினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவார் என்றும் கூறினார்.

## கொழும்பில் தேடப்பட்டவர் யாழ்ப்பாணத்தில் கைது

யாழ்ப்பாணம், வியா.

கொழும்பு பொலிஸாரால் பல காலமாகத் தேடப்பட்டு வந்தவர் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

தியாகராஜா சின்னராஜா என்ற 38 வயதுடைய இளைஞரே இவ்விதம் கைதுசெய்யப்பட்டார்.

ஒன்பது குற்றச்சாட்டுக்களின் பேரில் தேடப்பட்டு வந்த இவரை யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த குற்றத்தடுப்புப் பகுதி உத்தியோகத்தர் திரு. ந. இ. இரத்தினம் கைதுசெய்தார்.

இவர் சந்தேகத்துக்கிடமான முறையில் நடந்து கொண்டதை அவதானித்த திரு. இரத்தினம் இவரைக் கைது செய்தார். இவர் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவிருக்கிறார்.

கொழும்பில் பொலிஸார் கைதுசெய்தசமயம் அவர்களது பிடியிலிருந்து இவர் ஓடியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### கொழும்பிலும் கொண்டாட ஏற்பாடு

குரும்பசிட்டி, புதன்

ஈழத்து தமிழ் நாடகத் தந்தை கலையரசு க. சொர்ணலிங்கத்தின் 80-வது பிறந்த தின விழாவை மிகச் சிறப்பாக கொழும்பிலும் அடுத்த மாதம் கொண்டாட ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. இதற்கான ஏற்பாடுகளை செய்வதில் செனெற்றர். ரி. நீதிராஜா கொழும்பிலுள்ள கலைச் சங்கங்களின் ஒத்துழைப்பைக்கோரி வருகின்றார்.

### இறந்தவர் யார்?

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதியில் நாவலர் சத்திக்கருகாமையில் சுமார் 70 வயது மதிக்கத்தக்க ஒரு வயோதிபரின் சடலம் காணப்பட்டு யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரி சவச்சாலையில் இப்போது வைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. பி. பி. விஜயத்துங்கா இச்சடலத்தைக் கண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர் சம்பந்தமாக விபரம் அளிக்கவிரும்புபவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

### ஆங்கில நூல் கண்காட்சி

யாழ்ப்பாணம், வியா.

பிரிட்டிஷ் கவுன்சில் அளிக்கும் ஆங்கில மொழிநூல் கழகத்தின் பாடப்புத்தகக் கண்காட்சியொன்று யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் இன்று 20-ம் திகதி மாலை 5 மணிக்கு யாழ் மேயரினால் திறந்து வைக்கப்படும்.

21ம் திகதி 22-ம்திகதிகளிலும் காலை 9 மணியிலிருந்து மாலை 7மணிவரை இக் கண்காட்சி இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

நம்பிக்கையான மலையாள மாயாஜால வசீகர பரிசாரத்தைக்கொண்டு, காதல் பிரச்னைகள் 3 நாட்களில் பரிபூரணமாகத் தீர்த்து வைக்கப்படும். இருவர் பெயர்களையும் எழுத இலவச விபரங்களுக்கு எழுதுங்கள். நீலன் கந்தசாமி. குப்தி வித்யாதணய, நிட்டம்புவ. 762

### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு: பாடசாலைகளின் உபயோகத்திற்கான மாணவர் தேர்ச்சி அறிக்கைப்பத்திரம் 1 வருடம் 3 வருடங்கள் 5 வருடங்களுக்கான படிவங்கள் விற்பனையாகின்றன. ஸ்ரீகாந்தா அச்சகம் 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 770

பெட்போர்ட் விநியோகவான்கள் உடனடிவிற்பனைக்குண்டு. 33 ஸ்ரீ 391, CV 2578, CV 4141 கூடிய விலைக்குக் கேட்போருக்கு வழங்கப்படும். யாழ்ப்பாணம் ஓட்டோஸ் லிமிடெட்டில்பார்வையிடலாம். 777

வீடு கட்டுவதற்கு உவந்த காணி - யாழ்ப்பாணம் புகையிரதநிலையத்துக்கருகாமையில் ஆஸ்பத்திரி, பெரியகடை, சின்னக்கடை, பள்ளிக்கூடங்கள் ஆலயங்களுக்கு மத்தியில் உள்ளது, பேர்ச் ஒன்று 1800ரூபாக்கு மேல். தொடர்பு கொள்ளவும்: M. I. இராசரத்தினம் ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி. 720

## வசாவிளான் கொலைவழக்கு

குரும்பசிட்டி, புதன்

மல்லாகம் நீதிபதி திரு எம். சண்முகலிங்கம் முன்னிலையில் புதன்கிழமை வசாவிளான் கொலைவழக்கு தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சப்இன்ஸ்பெக்டர் வி. செல்லையா சாட்சியமளித்தார். எதிரிதரப்பு வழக்கறிஞரின் குறுக்குவிசாரணைக்குப் பின் எதிரியை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டு மேல்விசாரணையை இம்மாதம் 31-ம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

## சங்கிலி திருடியவருக்கு 3 மாத சிறை

வல்வெட்டித்துறை, புதன்

பொலநறுவை தம்பாலையைச் சேர்ந்த அகமட் லெப்பே முஸ்தபா என்னும் இளைஞன் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பிலிப்குமார் என்னும் ஏழு வயதுச் சிறுவனின் ரூபா 800 பெறுமதியான சங்கிலியைகடத்த தைமாதம் 3-ந் திகதி களவாடியதாக வல்வெட்டித்துறை பொலிசாரால் குற்றம்சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு 3 மாதச் சிறைத்தண்டனை விதித்துள்ளார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 20-3-69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 வீணை, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 நேயர் கடிதங்கள், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலையும் கடிதமும், 10-00 நேயர் விருப்பம்.

இணுவில்

ஸ்ரீ காலிங்கன்

Daily 4-15, 7 & 10-00p.m.

Dean Martin, Frank Snatra

in

4 FOR TAXES

ராணி

யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்.

கல்யாணகுமார், முத்துராமன், தேவிகா

நடித்த

நெஞ்சில் ஓர் ஆலயம்

## கொக்குவில் கிராமசபை கேள்விவிளம்பரம்

1. 1969-ம் ஆண்டு பங்குனி மாதம் 30-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3-00 மணிவரை கொக்குவில் கிராமசபைத் தலைவரால் கீழ்க்காட்டிய வேலைகளுக்குச் 'சீல்' வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

[அ] கொக்குவில் கிழக்கு கருவேலடி பாடசாலை ஒழுங்கை. திருத்தம்.

[ஆ] கோண்டாவில் மஞ்சத்தடி ஒழுங்கை திருத்தம்.

2. கேள்விகள் கிராமச்சபை அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில்போடப்படவேண்டும் அல்லது பதிவுத் தபாலில் கிராமசபைத் தலைவருக்கு அனுப்பப்படவேண்டும் அல்லது 30-3-69 திகதி மாலை 3-00 மணிக்கு நடைபெறவிருக்கும் கிராமச்சபைக் கூட்டத்தில் கொடுக்கப்பட வேண்டும். கேள்வியைக்கொண்ட காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் மேற்படி குறிப்பிட்ட பிரகாரம் வேலைக்கான கேள்வி என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

3. கேள்வியின் நகல் பிரதியொன்று காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் மேற்படிகுறிப்பிட்ட பிரகாரம் வேலைக்கான கேள்வி நகல் என்று எழுதப்பட்டு யாழ்ப்பாணப்பகுதி உள்ளூராட்சி உதவி அதிபருக்கு த.பெ. 19, செயலகம்என விலாசமிட்டு பதிவுத் தபாலில் அதேநேரத்தில்கிடைக்க அனுப்பப்படுதல் வேண்டும்.

4. ரூபா 25 - கட்டுக்காசு கட்டியதன் பேரில் கி. ச. தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தகாரருக்கு மட்டும் கிராமச் சபைத் தலைவரால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களில் கேள்விகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். கட்டுக்காசு கட்டியதற்கான பற்றுச்சீட்டு கேள்வியுடன் இணைக்கப்படுதல் வேண்டும். பத்திரங்கள் 29-3-1969 மாலை 2மணிவரை வழங்கப்படும்.

5. கேள்விகளில் உள்ள மாற்றங்கள், அழித்தல்கள் யாவும் கேள்விக்காரரின் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

6. அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்ட இரண்டுவாரங்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொள்ளத் தவறும் கேள்விக்காரர் எவருக்கும் கேள்விக் கட்டுப்பணமான ரூபா 25 - திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

7. மேலதிகமான விபரங்கள் எதுவும் கிராமச்சபைத் தலைவரிடமிருந்து அலுவலக

## யாழ். இந்து, மகாஜனவை வெற்றி பெற்றது

அளவெட்டி புதன்

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கும், யாழ். இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி 12 ஓட்டங்களில் வெற்றியீட்டியது.

முதலாம் இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய இந்துக் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 128 ஓட்டங்களை பெற்றது. முதல் இன்னிங்சில் மகாஜன சகல விக்கெட்டுகளையும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டாம் இன்னிங்சில் இந்துக்கல்லூரி 8 விக்கெட் நஷ்டத்திற்கு 258 ஓட்டங்கள் எடுத்தது மகாஜன சகல விக்கெட்டுகளையும் இழந்து 200ஓட்டங்களைப்பெற்றது.

யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் இப் போட்டி நடைபெற்றது.

## டென்னிஸ் சுற்றுப்போட்டி

அல்லைப்பிட்டி, புதன்

யாழ்ப்பாணம் ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடாத்தும் வட இலங்கை டென்னிஸ் பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஏப்ரல் மாதம்8-ம் திகதி தொடக்கம் 13ந்திகதி வரை யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கிறது. இப் போட்டியில் அகில இலங்கையிலுமுள்ள டென்னிஸ்விளையாட்டுக் கழகங்கள் பங்கு பெறுகின்றன, 13-ந் திகதி மாலை வெளியீட்டும் கழகங்களுக்கு பரிசளிப்பு வைபவம் நடைபெறும்.

## முதல்பரிசு பெற்ற நாடகம்

யாழ்ப்பாணம், வியா.

குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையத்தினர் கடந்தவாரம் குரும்பசிட்டிமகாதேவா வித்தியாசாலையில் நடத்திய நாவலர் ஞாபகார்த்த நாடகப்போட்டியில் சுண்டிக்குளி கே.பி. எம். நாடக மன்றம் மேடையேற்றிய ''நீறூற்று'' என்னும் நாடகம் முதலாவதாகத் தெரியப்பட்டது. நாடக எழுத்துப் போட்டியிலும் இதே நாடகம் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டு அதன் ஆசிரியரான திரு. ஜே. எம் இராசுவுக்குத் தங்க பதக்கம் பரிசளிக்கப்பட்டது

## இன்றைய பலன்

(20-3-69)

### மணவாளக் கோலம்

யாழ்ப்பாணம் புதன்

வரணி சேவலப்பிட்டி பூவரசடிப் பிள்ளையார் கோவிலில் வரும் 23ம் தேதி பகல் விசேஷ அபிஷேகமும் தீபாராதனைகளும் நடைபெறும். இவ் அபிஷேகத்தை பிரமஸ்ரீ இ குகதாசசர்மா நடாத்திவைப்பார், ந.நி

## புதிய நிர்வாகிகள்

அளவெட்டி, புதன்

தமிழ் இளைஞர் இயக்க கூட்டம் ஒன்று கொக்குவிலில் நடைபெற்றபோதுபின் வருவோர் புதுவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. தா. தேசிய இலங்கைமன்னன், உபதலைவர்: திரு. சி. செல்வராசா, காரியதரிசி: திரு. சோ. சேனாதிராசா, உபகாரியதரிசி: திரு. ராஜகுலேந்திரன், பொருளாளர்: திரு. மை. தம்பிநாயகம்.

தொகுதிகள் தோறும் 2 பேர் நிர்வாகசபையில் தெரிவானார்கள்.

0 0 0

புலோலி, புதன்

வடமராட்சி மக்களின் மன்றவருடாந்தக் கூட்டம் திருமதி பார்பதி அம்மாள் சிவராமலிங்கம் தலைமையில் மன்றக் கட்டடத்தில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்-திருமதி மனோன்மணி சிவஞானசுந்தரம். உபதலைவர்- திருமதி சரஸ்வதி செல்லத்தம்பி, திருமதி ஆர். பாலகிருஷ்ணர், காரியதரிசி- திருமதி சாவித்திரி மாணிக்கவாசகர். திருமதி ஜெயலட்சுமி சந்திரசேகம் தனதிகாரி- திருமதி இராஸ்வரி கணபதிப்பிள்ளை. உபதனதிகாரி- செல்வி அலகேஸ்வரி கந்தசாமி மற்றும் 7பேர் கொண்ட நிர்வாகசூழு தெரிவு செய்யப்பட்டது.

இம் மாதம் 24ம் திகதி புதுவருடபிறப்புக்காக விற்பனை மன்ற கட்டிடத்தில் நடத்துவதெனவும் மாணவிகளால் செய்யப்பட்ட தையல், கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## உடைந்த போத்தலால் குத்தினர்

# சென். ஜோன்ஸ் வீரர்களுக்கு மத்திய கல்லூரி அதிபர் பாராட்டு

## பெண்களின் கூட்டம் வீரர்களை உற்சாகப்படுத்தியது

(நமது விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணம், வியா.

''கிரிக்கெட் ஒரு வெறும் விளையாட்டல்ல. அது ஒரு பண்புள்ள விளையாட்டு. இவ் விளையாட்டில் கலந்துகொள்ளும் வீரர்களுக்கும், இவ் விளையாட்டை பார்வையிடும் ரசிகர்களுக்கும்பொறுமையே மிகமிக முக்கியமாகும்''. இவ்வாறு மத்திய கல்லூரி சென் ஜோன்ஸ் கல்லூரிகளின் 71-வது வருடாந்தக் கிரிக்கெட் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சென். ஜோன்ஸ் கல்லூரியின் அதிபர் திரு. பூரணம்பிள்ளை கூறினார்.

மத்தியகல்லூரியின் அதிபர் திரு. ஈ. சபாலிங்கம் தமது நன்றியுரையில் கூறியதாவது; இம்மாபெரும்கிரிக்கெட்போட்டியை மிகவும் சிறப்பாகவும் அமைதியாகவும் நடத்துவதற்கு உதவி செய்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் சென் ஜோன்ஸ் கோஷ்டியின் காப்டன் சுரேந்திராவுக்கும், ஜெயரட்ணத்துக்கும், எமது கல்லூரியின் சார்பிலும் என் சொந்தச்சார்பிலும் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன். இப்போட்டியைப் பற்றி பலர்கட்டிய மனக்கோட்டைகளை, தகர்த்தெறிந்த பெருமை இவ்விரு வீரர்களையும் சாரும்'' என்றார்.

சிறப்புவாய்ந்த வீரர்கள் எனத் தெரிவுசெய்யப்பட்ட வீரர்களுக்கு திருமதி பூரணம்பிள்ளை பரிசுகளை வழங்கினார்.

### பெண்களின் கூட்டம்

இம்முறை இப்போட்டியைக் கண்டுகளிப்பதற்குவந்திருந்தவர்களில் பெண்களின் கூட்டம் கூடுதலாகக் காணப்பட்டது. வேம்படி மாணவிகளும், சுண்டிக்குழி மாணவிகளும் போட்டி நடைபெற்ற இரு நாட்களும் கடும் வெய்யிலின் மத்தியிலிருந்து தத்தம் கல்லூரி வீரர்களுக்கு உற்சாகமூட்டும் விதத்தில் இவர்கள் போட்ட கரகோஷமும். 'பைலாப்' பாட்டுகளும் இப்போட்டிக்குமேலும் மெருகூட்டியது. மாணவர்களின் 'பைலாக்'கோஷ்டி திடீர்திடீரெனத் தோன்றி மறைந்தவண்ணமிருந்தது.

காப்டன் சுரேந்திரா மிகவும் திறமையாக பந்துவீசி 23 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஜெயரட்ணம், மில்ஸ், நவரட்ணராசா முறையே 2, 1, 1 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

சென் ஜோன்ஸ் கல்லூரி தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 76 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுரேந்திராவும், சிவபாலனும் முறையே 22, 26 ஓட்டங்களைப்பெற்றனர். சாந்திகரன் 14 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையுப் ஜெயரட்ணகுமார் 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், தில்லையம்பலம் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

மத்தியகல்லூரி 2-வது இன்னிங்ஸில் மொத்தம்119 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டி 3 விக்கெட்டுகளை இழந்தபோது ஆக 21 ஓட்டங்களையே எடுத்திருந்தது. இதன்பின் துடுப்பெடுத்தாடிய இரட்டையர்களாகிய தயாசிங்கமும், சாந்திகரனும் திறமையாக துடுப்பெடுத்தாடி முறையே 39, 31 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர். ராஜசிங்கம் 12 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காது இருந்தபர். மில்ஸ், சுரேந்திரா, சிவபாலன், ஜெயரட்ணம் முறையே 3, 2, 2, 1 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

சென். ஜோன்ஸ் கல்லூரி 2-வது இன்னிங்ஸில் 6 விக்கெட் நஷ்டத்துக்கு 124 ஓட்டங்களை எடுத்தது. இக்கோஷ்டி 195 நிமிடங்களில் 149 ஓட்டங்களை எடுத்ததால் இப் போட்டியில் வெற்றிபெறலாம் என்ற நிலையில் இருந்தபோதும் 33 ஓட்டங்களில் இக் கோஷ்டி மளமளவென 5 விக்கெட்டுக்களை இழந்து இந்நிலையில் மத்தியகல்லூரியின் அதிவேகப் பந்துவீச்சு வீரர் தில்லையம்பலம் 9 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார். இதன் பின் துடுப்பெடுத்தாடிய சுரேந்திராவும், ஜெயரட்ணமும் நீண்டநேரம் துடுப்பெடுத்தாடி தமது கோஷ்டியின் எண்ணிக்கையை 101 ஆ உயர்த்தியபோது, தில்லையம்பலம் வீசிய பந்துகள் ... டங்களை எடுத்து ஆட்டமிழக்காதுஇருந்தார். தில்லையம்பலம் 5 விக்கெட்டுகளையும் ரஞ்சிதகுமார் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றதால் 1960-ம் ஆண்டிலிருந்து இதுவரை தோல்வியடையாத சென்ஜோன்ஸ் கல்லூரியிடமே இம்முறையும் சாம்பியன் வெள்ளிக்கிண்ணம் இருக்குமென அறிவிக்கப்பட்டது.

இப் போட்டிக்கு திருவாளர்கள் சற்சிங்கராயரும் தியாகராசாவும் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர். (தே. நி)

## தெரிவு

உடுப்பிட்டி புதன்

''யாழ். கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியில் வர்த்தகப் பயிற்சி வகுப்புகளுக்கு மாணவர் தெரிவு செய்யப்பட இருக்கிறார்கள். இத் தேர்வில் ஜீ. சீ. ஈ. உயர்தரம்) வர்த்தகப் பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்குப் போட்டியின்றிப் பிரவேசப் பரீட்சை இல்லாமல் அனுமதி அளிக்கப்பட வேண்டும்.''

மேற்கண்டவாறு வடமராட்சி வர்த்தக மாணவர் சங்கச் செயலாளர் திரு அ தேவச்சந்திரன் உப சபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரத்திற்கு அனுப்பியுள்ள மகஜரில் கேட்டுள்ளார்.

உள்ளூராட்சித் தட்டெழுத்தாளர் பரீட்சையை யாழ்ப்பாணத்திலேயே நடாத்த ஒழுங்கு செய்து தருமாறும் உப சபாநாயகரைக் கேட்கப்பட்டுள்ளது.

## தட்டெழுத்தாளர் பரீட்சை

உடுப்பிட்டி புதன்

வழக்கம்போல் மீண்டும் தட்டெழுத்தாளர் பரீட்சையை யாழ்ப்பாணத்திலேயே நடாத்த வேண்டுமென்றும், கொழும்பில் இப்பரீட்சை நடாத்தப்பட்டால வர்த்தக மாணவர்கள் இங்கிருந்து தட்டச்சு இயந்திரங்களைக் காவிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுமென்றும், வடமராட்சி வர்த்தக மாணவர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

4 FOR TAXES

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்.
கல்யாணகுமார், முத்துராமன், தேவிகா நடித்த
# நெஞ்சில் ஓர் ஆலயம்

யாழ்ப்பாணம்
வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன், ராஜ் ஸ்ரீ, நாகேஷ், சுந்தரராஜன், ஜெயபாரதி
நடித்த
அனுபவி ராஜா அனுபவி

கெப்பிட்டல் பிளாஸா மைலன்
ஸ்ரீ கிருஷ்ணா விஜிதா
(திருமலை) (ஹற்றன்)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
எஸ். வி ரங்கராவ், பானுமதி
முத்துராமன், பாரதி, ஏ. வி. எம். ராஜன்,
நாகேஷ் நடித்த
வாசு பிலிம்ஸ் அளிக்கும்
# பூவும் பொட்டும்
டைரக்ஷன்: தாதாமிராசி

கிங்ஸ்லி வெலிங்டன் விஜயா
(கொழும்பு) (யாழ்ப்பாணம்) (மட்டுநகர்)



சிவாஜி, விஜயா, முத்துராமன், எல். விஜயலக்ஷ்மி, நாகேஷ், குமாரிசச்சு
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின்
ஊட்டிவரை உறவு
(ஈஸ்ட்மென் கலர்)
இத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்
மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்
எஸ். எஸ். வாசன் அவர்களால்
ஈஸ்ட்மன் கலரில் படமாக்கப்பட்ட சென்னையில் நடைபெற்ற
இரண்டாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு
கோலாகல காட்சியையும்
மற்றும்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். – அறிஞர் அண்ணா
ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்று
வதையும் பார்க்கலாம்!

கழகங்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தவறும் கேள்விக்காரர் எவருக்கும் கேள்விக் கட்டுப்பணமான ரூபா 25 - திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

7. மேலதிகமான விபரங்கள் எதுவும் கிராமச்சபைத் தலைவரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

8 கேள்விப் பத்திரங்கள் 29-3-69 தேதிக்குப்பின் கொடுக்கப்படமாட்டா.

சி. க. சபாபதி,
தலைவர்,
கொக்குவில் கிராமச்சபை
கொக்குவில் கிராமசபை
அலுவலகம்,
கொக்குவில்.
16-3-1969. 1235

## தெல்லிப்பழை காங்கேசன் துறை மோதல்

அளவெட்டி, புதன்

தெல்லிப்பழை சூட்டிங் ஸ்டார் விளையாட்டுக் கழகமும் காங்கேசன்துறை பக்கற்றேஸ் விளையாட்டுக்கழகமும் காங்கேசன்துறை பட்டினசபை மைதானத்தில் மோதிய ஒரு சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ராஜா (யாழ்ப்பாணம்) 66வது தினம்
தினசரி 3 காட்சிகள்
2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
ரி. எம். சௌந்தரராஜன்
நடித்த
பட்டினத்தார்

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
Vincent Price,
Frankie Avalon
in
Dr. GOLDFOOT & HIS BIKINI MACHINE

REGAL at Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m.
Joe Brown, Sophie Hardy
in
THREE HATS FOR LISA

கம் பரிசளிக்கப்பட்டது

## இன்றைய பலன்

(20-3-69)

பங்குனி மாதம், 7 ௳

வியாழக்கிழமை

திதி- துதியை பகல் 10-35 மேல் திருதியை.

நட்சத்திரம்- ரேவதி பகல் 10-19 மேல் அச்சுவினி.

ராகுகாலம்- 1-49-3-19.

சுபநேரம்- 7-49-9-19.

இன்று பிறந்தவர்களுக்கு:- இவ்வாண்டு ஒரு சோதனைக்குரிய ஆண்டாகும். சொற் சோர்வு, உத்தியோகஸ்தர்களுக்கு உயர்வில் தாமதம். ஊக்கத்தில் சோர்வும், உறவினர் பகை, காதலர் வாழ்வில் கசப்பு மனப்பான்மை, கல்வி பயிலுவோர் கவனம் செலுத்தின் சமசித்திதரும்ஆண்டாகும்.

மேஷம்-இறைவழிநாட்டம், இன்சொல் கேட்டல்.

ரிஷபம்:- தரத்தில் இறக்கம், தவறான பாதை.

மிதுனம்- பந்தபாசம், பரவசத்தாண்டவம்.

கடகம்- புத்திர சுகம், புண்ணிய விருப்பு.

சிம்மம்- சினம் சீறும், சிந்தனை வேண்டாம்.

கன்னி- தாம்பத்தியம் சிறக்கும், தனமும் சேரும்.

துலாம்- சிநேகிதா பகை, சிந்தனைக் குழப்பம்.

விருச்சிகம்- தந்தையின் கருணை, தடைகள் விலகும்

தனுசு- புண்ணிய விருப்பு, பிரயாணச் சிந்தை

மகரம்- நாடியது கிடைக்கும், நல்லெண்ணம் வளரும்.

கும்பம்- பாதையில்படுகுழி, பார்த்துநட.

மீனம்- நரிவேலைநடக்கும், நன்றுகப்பார்.

— சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

தையல், கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## உடைந்த போத்தலால் குத்தினர்

வல்வெட்டித்துறை புதன்

கரவெட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராகவன் என்பவர் நெல்லியடி ஜிமரியநாயகம் என்பவரை கடந்த செப்டெம்பர் மாதம் 29-ந் திகதி உடைந்த போத்தலால் குத்தி படுகாயம் உண்டு பண்ணியதாக பொலிஸாரால் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு கை அடையாளம் கொடுக்கும்படி உத்தரவிட்டு தீர்ப்பு கூறுவதை இம் மாதம் 24-ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

## தாக்குதல் வழக்கு தீர்ப்புஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை புதன்

கே. வைத்திலிங்கம், க. செந்திவேல் ஆகிய இருவரும் அதே இடத்தைச் சேர்ந்த க. சின்னத்துரை, சி. பழனிவேல் ஆகிய இருவருக்கும் கடந்த செப்டெம்பர் 11-ந் திகதி கத்தியால் வெட்டியும் கொட்டனுல் அடித்தும் படுகாயம் உண்டு பண்ணியதாக வல்வெட்டித்துறை பொலிஸாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரிகளை குற்றவாளியாகக் கண்டு கை அடையாளம் கொடுக்கும் படியும் இம் மாதம் 23-ந் திகதிவரை றிமாண்டில்வைக்கும்படி உத்தரவிட்டு தீர்ப்பு கூறுவதை ஒத்திவைத்துள்ளார்.

## 14 வயதில் குற்றம்செய்தார்

வல்வெட்டித்துறை, புதன்

ஆழ்வாப்பிள்ளை சுப்பிரமணியம் என்னும் 14 வயது சிறுவன் செய்த குற்றத்திற்காக பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசாவால் ரூபா 200 பிணையில் இரண்டு வருட நன்னடத்தைப்பிணையில் செல்லுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

லின் மத்தியிலிருந்து தத்தம் கல்லூரி வீரர்களுக்கு உற்சாகமூட்டும் விதத்தில் இவர்கள் போட்ட கரகோஷமும். 'பைலாப்' பாட்டுகளும் இப்போட்டிக்குமேலும் மெருகூட்டியது. மாணவர்களின் 'பைலாக்'கோஷ்டி திடீர்திடீரெனத் தோன்றி மறைந்தவண்ண மிருந்தது. மைதானத்தினுள் பைலா, வீதியில் பைலா, மரக்கிளைகளின்மேல் பைலா, மதில் சுவர்களின்மேல் பைலா, சைக்கிளில் பைலா, கார்களினுள் பைலா, மாட்டுவண்டியினுள்ளும் பைலா. இவ் விருநாட்களும் யாழ்ப்பாண வீதிகள் எங்கும் மாணவர் பைலாக்கோஷ்டிகள் பவனி வந்தவண்ணமே இருந்தது.

### தமிழிலும் வர்ணனை

இம்முறை கிரிக்கெட் போட்டியைப்பற்றிய நேர்முகவர்ணனையில் தமிழும் இடம்பெற்றது மிகவும் பாராட்டக்கூடியதாக இருந்தது.

'பூவா - தலையா' என்ற நாணயச் சுண்டலில், சென் ஜோன்ஸ் வெற்றி பெற்றதால், யாழ். மத்திய கல்லூரியே முதலில் துடுப்பெடுத்தாடியது. இக்கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 105 ஓட்டங்களைப்பெற்றது- இதில் காப்டன் புரட்சிதாசனும், ஜெயரட்ணமும் முறையே 22,21 ஓட்டங்களைப் பெற்றனர்

9 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார். இதன் பின் துடுப்பெடுத்தாடிய சுரேந்திராவும், ஜெயரட்ணமும் நீண்டநேரம் துடுப்பெடுத்தாடி தமது கோஷ்டியின் எண்ணிக்கையை 101 ஆ உயர்த்தியபோது, தில்லையம்பலம் வீசிய பந்தால் ஜெயரட்ணம் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சுரேந்திரா பின்மில்ஸ்சுடன் இணைந்தாடி இப்போட்டி முடிவடையும் வரை 50 ஓட்

தட்டெழுத்தாளர் பரீட்சையை யாழ்ப்பாணத்திலேயே நடாத்த வேண்டுமென்றும், கொழும்பில் இப்பரீட்சை நடாத்தப்பட்டால வர்த்தக மாணவர்கள் இங்கிருந்து தட்டச்சு இயந்திரங்களைக் காவிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுமென்றும், வடமராட்சி வர்த்தக மாணவர் சங்கச் செயலாளர் திரு. அ. தேவச்சந்திரன் உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## திருமண அழைப்பு

**மணமகன்:** செல்வன் கணேஷதாசன்
[யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி]

**மணமகள்:** செல்வி கௌரீஸ்வரி

**நேரம்:** பங்குனி 11-ம் நாள் 24-3-69 திங்கட்கிழமை பகல் 11-30 மணிக்கும் 12-30 மணிக்கும் இடையில்.

**இடம்:** சுதுமலை அம்மன் கோவில்.

**வரவேற்பு:** 24-3-69 திங்கட்கிழமை பி. ப. 4மணிக்கு மணமகள் இல்லத்தில் நண்பர்களும் உறவினர்களும் அன்புடன்அழைக்கப்படுகின்றனர்.

**தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்பமுடியாததை வினயத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.**

திருமதி ஜெ. செல்வநாயகம்,
[காலஞ்சென்ற திரு. பி. செல்வநாயகம்
அவர்களின் பாரியார்]
(மணமகளின் பெற்றோர்)
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

திருமதி பி.கதிரவேலு,
[காலஞ்சென்ற எஸ். கதிரவேலு
அவர்களின் பாரியார்]
(மணமகனின் பெற்றோர்)
சுதுமலை தெற்கு, மானிப்பாய். 1236

மஸி-பெர்குசன் 135
ட்ராக்டர்கள்
உடனடி விநியோகத்திற்கு
இப்பொழுது கிடைக்கும்
ஏற்கனவே எங்களிடமோ அல்லது எங்கள் விற்பனையாளர்கள், இனஸ்தாபனங்கள் ஆகியவற்றிடம் ஓடர் செய்த வாடிக்கையாளர்களும், சிறுபோக வேளாண்மைக்கு மஸி-பெர்குசன் ட்ராக்டர்கள் தேவைப்படுபவர்களும் எம்முடன்உடனடியாகத் தொடர்பு கொண்டு ட்ராக்டர்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.
பிரவுண் அன்ட் கம்பனி லிமிட்டெட்,
விவசாயப் பிரிவு,
தேவநம்பியதிஸ்ஸ ரோட்,
கொழும்பு-10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்படுகைகளில் ராணுவ நடவடிக்கை: தடை செய்யக்கோரும் ரஷ்யா தீர்மானம்

## ஜெனிவா மகாநாட்டில் தாக்கல்

### ஆயுதக்குறைப்பு பற்றி இருதரப்பும் கூடிப்பேச யு தாண்ட் வலியுறுத்தல்

ஜெனிவா, மார்ச் 19

கடற்படைகளை ராணுவத் தேவைகளுக்கு பாவிப்பதை நிறுத்துவதற்கு ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான நகல் வாசகமொன்றை சோவியத் யூனியன் ஜெனிவா ஆயுதக் குறைப்பு மகாநாட்டில் சமர்ப்பித்துள்ளது.

மகா நாட்டுக்கு வெளியில் அணு ஆயுதக் குறைப்புப் பற்றி சோவியத் யூனியனுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.

ஆயுதக் குறைப்புகள் பற்றி பேச்சு வார்த்தைகளை உடனே ஆரம்பிக்கும்படி இரு வல்லரசுகளையும் இந்த மகா நாட்டுக்கு அனுப்பியுள்ள ஒரு செய்தியில் யுதாண்ட் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

கடற்படைகளை இராணுவ நடவடிக்கைகளுக்கு பயன் படுத்துவதைத் தடுப்பதற்காக ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்வதற்கான நகல் ஒப்பந்த வாசகமொன்றை ரஷ்யா தாக்கல் செய்தது. இந்த ஒப்பந்தத்தை இப்போதைய அமைப்பில் ஒப்புக் கொள்ள அமெரிக்கா மறுத்து விட்டது. அமெரிக்கா அணு ஆயுதத்தடை விஷயத்தில் தான் அதிக அக்கறை கொண்டிருக்கிறது என்றும் அமெரிக்க தரப்பில் தெரிவிக்கப்பட்டது,

ஏழு மாதங்களுக்கு முன் ஒத்தி போடப்பட்ட மகாநாடு மீண்டும் கூடிய பொழுது, ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜினும் அமெரிக்க அதிபர் நிக்ஸனும் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

ஆயுதக் குறைப்புகள் பற்றிஅமெரிக்காவுடன் பேச்சுகளை ஆரம்பிக்க அமெரிக்கா ஆவல் கொண்டிருப்பதாக திரு. நிக்ஸன் தெரிவித்திருக்கிறார்.

இந்த மகாநாட்டுக்கு ஐ. நா. பொதுக் காரியதரிசி அனுப்பியுள்ள செய்தியில் தாக்குதல் நடத்தவும் பாதுகாத்துக் கொள்ளவுமான எல்லாவித ஆயுதங்களையும் தடை செய்து வருவதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும்படி இரு வல்லரசு நாடுகளையும் கேட்டிருக்கிறார்.

அமெரிக்காவும் ரஷ்யாவும் மீண்டும் தூதரக பொறுப் பதிகாரிகளை இரு நாடுகளிலும் நியமித்துக் கொள்ள விருக்கின்றன. இரு நாடுகளுக்குமிடையில் கெடு பிடிபோர் உச்சக் கட்டத்திலிருந்த போது இந்த அதிகாரிகள் திருப்பி அழைக்கப்பட்டனர். அமெரிக்க அதிகாரி ரஷ்யாவில் லெனின் கிராட்டிலும், ரஷ்ய அதிகாரி சென் பிரான்சிஸ் கோ விலும் நியமிக்கப்படுவர்.



கி. பாகிஸ்தானில் தொடர்ந்து குழப்பம்

## ஒருவர் பலி; 200 பேருக்குகாயம் 1000 வீடுகள் தீக்கிரை

ராவல்பிண்டி, மார்ச், 19

கிழக்குப் பாகிஸ்தானில் புதிதாக வெடித்த குழப்பங்களில் ஒருவர் கொல்லப் பொலிசாருக்கும் அவர்களுக்குமிடையில் மோதல் ஏற்பட்டது. நான்கு பொலிஸார் கடலில் மூழ்கடிக்கப்

கைத்தொழில் பிரதேசம்

தமிழ் நாட்டுக்கு

## ஐந்து கோடி ரூபாய் கேட்கிறார் கருணாநிதி

### முடிந்தவரை கொடுக்க மொரார்ஜி சம்மதம்

புதுடில்லி, மார்ச் 19

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி நேற்று இந்திய துணைப் பிரதமரும் நிதியமைச்சருமான திரு. மொரார்ஜி தேசாயைச் சந்தித்து ஆலோசனைகள் நடத்தினார். தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி நிலைமைகளைச் சமாளிக்கவும் இதர முக்கிய தேவைகளைச் சமாளிக்கவும் 5 கோடி ரூபாய் கொடுத்துதவும்படி மொரார்ஜி தேசாயை திரு. கருணாநிதி கேட்டுக்கொண்டார். தம்மால் கூடியளவு கொடுத்துதவுவதாக அவர் வாக்குறுதியளித்துள்ளார்.

திரு. கருணாநிதியையுப் திரு. மாதவனையும் கௌரவிப்பதற்காக தி. மு. க. ஆட்சிமன்ற உறுப்பினர்கள் நடத்திய உபசாரக்கூட்டத்தில் உள்துறை அமைச்சர் திரு. சவாண், துணைப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் ஆகியோரும்கலந்து கொண்டனர்.

யாழ். தொழில் நுட்பக்கல்லூரி

## எந்திரவியல் மாணவர்மத்தியில் எழுந்துள்ள பிரச்னை

வல்வெட்டித்துறை, புதன்

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி எந்தரவியல் விஞ்ஞானம் (பிரைமறி எஞ்சினியரிங் விஞ்ஞானம்) மாணவர்கள் கடந்த வருடம் நவம்பர் தொடக்கம் இவ்வருடம் பெப்ரவரிவரை தமிழ் மொழிமூலம்போதனை பெற்று வந்தனராம். ஆனல் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் தமிழில் கற்பிப்பதைவிட்டு ஆங்கிலத்தில் கற்பிக்கத் தொடங்கியுள்ளதைத் தொடர்ந்து மாணவர் மத்தியில் பலத்த சந்தேகமொன்று தோன்றியுள்ளது. பரீட்சைக்கு இன்னும் மூன்று மாதங்களே இருப்பதால் முழுப் பாடங்களையும் ஆங்கிலத்தில் படித்துப் பரீட்சை எழுத முடியுமா என்பதே அவர்களது சந்தேகமாகும். சிங்களப்பகுதிகளில் இப்பாடங்கள் அவர்களது தாய் மொழியிலேயே கற்பிக்கப் பட்டுவருகிறதாம்.

இதுசம்பந்தமாக மாணவர்கள் திரு. வி. நவரத்தினம் எம். பி, திரு. எம் சிவசிதம்பரம் எம். பி., திரு. கா. பொ. இரத்தினம் எம். பி. ஆகியோருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## நாவலப்பிட்டி இந்து வாலிபர்சங்கம் செய்தபுரட்சி

நாவலப்பிட்டி, புதன்

''வெளிநாட்டு குருமார்கள், பெரியார்கள் தங்கள் சமயப் பிரசாரத்திற்காக இளை நாடுகளுக்கு வந்த போது எமது நூல்கள், பண்பாடுகள் ... யும் எமது சமயம் ... நல்ல தத்துவங்கள் பற்றி ...

யரின் புதுவித 'அன்புப் பாட்டு நிகழ்ச்சியும், கதிரேசன் குமார மகாவித்தியாலய மாணவரின் 'கூற்றம் வென்றகுமரன்' எனும் நாடகமும் நடைபெற்றது. ... திரு. சி. நடராஜா நன்றியுரை வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "67 ஆண்டு கலைச்சேவையாற்றி ஈழத்தில் சாதனை செய்தவர்"

### கலையரசுவுக்குப் புகழ்மாலை

யாழ்ப்பாணம், வியாழன்

''அறுபத்தியேழு ஆண்டு காலம் தொடர்ச்சியாகக் கலைச்சேவையாற்றி ஈழத்துக்கலையுலகில் சாதனைசெய்தவர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள்'' என்று நேற்று முன்தினம் நடைபெற்ற கலையரசு கே. சொர்ணலிங்கத்தின் 80 வது பிறந்ததின விழாவுக்கு தலைமைவகித்துப் பேசுகையில் திரு. இ. மகாதேவா (தேவன் - யாழ்ப்பாணம்) குறிப்பிட்டார்.

யாழ். திறந்தவெளியரங்கில் நடைபெற்ற இவ் விழாவைவடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். கலையரசு சொர்ணலிங்கம் திருமதி சொர்ணலிங்கம், தமிழக நடிகர் டி. கே. பகவதி ஆகியோர் மேளவாத்தியத்துடன் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலிலிருந்து திறந்த வெளி அரங்குக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் கலையரசருக்கு 80 தாமரை மொட்டுக்களினலான மாலையும், திருமதி சொர்ணலிங்கத்துக்கு 80 மல்லிகை மொட்டுக்களினலான பூச்செண்டும் வழங்கப்பட்டது.

விழாவில் தமிழக நடிகர் திரு. டி. கே. பகவதி கலையரசருக்கு பொன்னடை போர்த்திக் கௌரவித்தார்.

திரு. மகாதேவா தமது தலைமையுரையில் மேலும் கூறியதாவது:-

ஈழத்து நாடகங்களில் ஆண்கள் பெண்வேஷம் போடும் நிலைமாறி பெண்களே நடிக்க வேண்டுமென்று வற்புறுத்தியவர் கலையரசு அவர்கள்.

யாழ். திறந்தவெளியரங்கில் இன்னும் சில வசதிகள் செய்யப்பட வேண்டும் குறிப்பாக மலசல கூடவசதி போதிய மின்சார வெளிச்ச வசதி, கண்டீன் வசதி ஆகியன செய்யப்படவேண்டும்.

இலங்கை வானெலியைச் சேர்ந்த கலாஜோதி எஸ். சண்முகநாதன் (சானு) பேசுகையில் இந்த நிலைக்கு ஆக்கி வைத்தவர் கலையரசராவார். எல்லோரையுமே நல்ல நிலைக்கு ஆக்கவேண்டுமென்ற எண்ணம் கொண்டமையினலேயே இவ்வளவு காலம்

கம்வரவேற்றுப் பேசினர். திரு. எஸ். திருச்செல்வம் நன்றியுரை வழங்கினர்.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் கோமகளும் குருமகளும் என்னும் வரலாற்று நாடகமும், கலைஞர் வேல் ஆனந்தனின் விஸ்வாமித்திர மேனகா என்னும் நாட்டிய நாடகமும், வி.வி. வைரமுத்துவின் மயான காண்டம் நாடகமும் விழாவில் இடம் பெற்றன.

(ந. நி.

## குழந்தைகளை சீர்திருத்த சிறந்தசாதனம்

### டி. கே. பகவதி கூறுகிறார்

அளவெட்டி, புதன்

'நாட்டின் வருங்கால பிரஜைகளாக திகழப்போகிறவர்கள் குழந்தைகள். அவர்களை சிறுவயதில் சிர்திருத்த சிறந்த சாதனம் நாடகக் கலை, கல்வியைப் புகுத்துவது போல நாடகக்கலையையும் புகுத்தவேண்டும். எனது மனத்தில் குடிகொண்டிருந்த ஆசை இப்போதுதான் நிறைவேறியுள்ளது. 'குழந்தைக்காக' என்ற படம் தயாரித்தபின்தான் எனது நினை நிறைவேறியது''.

அகில இலங்கை இளம்நடிகர் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க கலையரசு சொர்ணலிங்கத்தின் 80 வது வயது பூர்த்திவிழாவில் கலந்துகொள்ள யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்த பிரபல சினிமா நாடக நடிகர் திரு. டி. கே. பகவதி ஈழநாடு நிருபருக்களித்த பேட்டியில் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது? —

இன்று இலங்கையில் வீணை கருத்து வேற்றுமை வளர்ந்துவருகிறது. இதைப் போக்க கலைஞர் பரிவர்த்தனையால்தான் முடியும். இருநாட்டின் நல்லுறவையும் வளர்க்கலாம். நாடும் நலம்பெறும். பொருளாதாரமும் பெருக உதவும்.

நாடகக்கலை வளர்ந்தால் தான் சினிமாக்கலை வளர்ச்சியடையும். எனவே தமிழகத்தைப்போல இலங்கை அரசும் நாடகக் கலைக்கு நிதிஉதவி கொடுத்து ஊக்கம் கொடுக்கவேண்டும்.

இலங்கையில் சினிமா வளரவேண்டுமானல் நாடகத்துறையும் வளரவேண்டும். எனவே இலங்கை நாடக தயாரிப்பாளர் தமிழகத்தில் இருந்து படத் தயாரிப்பாளர்களையும் வருவித்து இங்கு உள்ள படத் தயாரிப்பாளருடன் சேர்ந்தும், இங்குள்ள சிங்கள தமிழ் கலைஞர் தமிழகம் சென்று அங்குள்ள நடிகர்களுடன் நடித்தும் சினிமா வளர உதவவேண்டும்.

## கைகள் கட்டப்பட்ட நிலையில் கடலில் மிதந்த பெண்ணின் சடலம்

வெள்ளவத்தை, புதன்

வெள்ளவத்தைகடற்கரையில் இனந் தெரியாத இளம் பெண் ஒருவரின் சடலம் கைகள் இரண்டும் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் மிதந்து கிடக்கக் காணப்பட்டது. வெள்ளவத்தை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உள்ள உயிர்பாதுகாப்புச் சங்கத்தைச் சேர்ந்த வீரர் ஒருவர் நீந்திக்கொண்டிருக்கையில் கடலில் மிதந்த இச்சடலத்தைக் கண்டு கரைக்கு இழுத்துக்கொண்டுவந்ததாக தெரிவித்தார். இவ்விளம்பெண்ணின் மரணம் கொலையா அல்லது தற்கொலையா என்பதும் தீர்க்கமுடியாத பிரச்னையாக பொலிசாருக்குப் பெரிய தலையிடியைக் கொடுத்துள்ளது. இச் சம்பவத்தையொட்டி பொலிசார் தீவிர புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## முருகன் அசுரரை அழித்ததால் பலாத்காரம்புதிதல்லஎன்கிறார் 'சண்'

# ஒருவர் பலி, 200 பேருக்குக் காயம்
# 1000 வீடுகள் தீக்கிரை

ராவல்பிண்டி, மார்ச், 19

கிழக்குப் பாகிஸ்தானில் புதிதாக வெடித்த குழப்பங்களில் ஒருவர் கொல்லப்பட்டு 200 பேர் வரை காயங்களுக்குள்ளாகி யிருக்கிறார்கள். ஆயிரம் வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. ராணுவம் அழைக்கப்பட்டுள்ளது.

பார்பதிபூர் பகுதியில் வேலைநிறுத்தம் மேற்கொண்டுள்ள பல்கலைக்கழக மாணவர் கோஷ்டி யொன்றுக்கும் இன்னொரு கோஷ்டிக்குமிடையில் ஏற்பட்டமோதல் ஒன்றின்போதே 200 பேர் காயமடைந்தனர். ராணுவம் அழைக்கப்பட்டது. தெருக்களில் ராணுவத்தினர் சுற்றித்திரிகிறார்கள். மாலைமுதல் காலைவரை ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. குழப்பங்களில் ஈடுபட்ட ஒரு கும்பலை அதிகாரிகள் டிரக்குகளில் ஏற்றிக்கொண்டு வருகையில் ராஜசாகிப் பகுதியில் குழப்பக்காரர்கள் பொலிசாருடன் மோதியதில் ஒரு பொலிஸ் அதிகாரி கொல்லப்பட்டார்.

கடந்த சனியன்று சிட்டகாங் துறைமுகப்பகுதியில் ஏற்பட்ட ஒரு குழப்பத்தில் மூன்று பொலிஸ் அதிகாரிகள் கொலைசெய்யப்பட்டார்கள். கப்பலொன்றில் குழப்பக்காரர்கள் ஏறியபோது பொலிசாருக்கும் அவர்களுக்குமிடையில் மோதல் ஏற்பட்டது. நான்கு பொலிஸார் கடலில் மூழ்கடிக்கப்பட்டனர். கலகக்காரர்கள் பிறகு கப்பலைச் சூறையாடிச் சென்றார்களாம்.

வேலைநிறுத்தம் செய்துவரும் பல்கலைக்கழக ஆசிரியர் மாணவர்களுடன் சேர்ந்துகொள்ள மற்றப் பாடசாலை ஆசிரியர் மாணவர்களும் முயற்சி எடுத்துவருவதாகக் கருதப்படுகின்றது. ஆஸ்பத்திரிகளில் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகின்றது. வேலைநிறுத்தம் காரணமாக நோயாளிகள் உணவு, தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். பல நோயாளிகள் ஆஸ்பத்திரியைவிட்டே போய்விட்டார்கள்.

மேற்கு பாகிஸ்தானிலும் வேலைநிறுத்தம் தொடர்ந்து செய்துவருகிறவர்களுடன் சேர்ந்துகொள்ள பல யூனியன்கள் முன்வந்துள்ளன.

இதற்கிடையில் பாகிஸ்தான் அரசியல் சாஸனத்தில் மாற்றம் செய்வது சம்பந்தமான மசோதாவைத் தயாரித்து முடித்திருப்பதாகவும் அதனை இன்று அதிபர் அயூப்கானிடம் கையளிக்கப் போவதாகவும் சட்ட மந்திரி சபார் அறிவித்துள்ளார்.

மேற்காஸிய நெருக்கடி குறித்து

## மன்னர் ஹுசேனைச்சந்திக்க திருமதி மெயர் விருப்பம்

டெல்-அவிவ், மார்ச் 19

மேற்காஸிய நெருக்கடியைத் தீர்த்துக்கொள்ள மேற்காஸிய நாடுகளே பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டும் என்று இஸ்ரேல் புதிய பிரதம மந்திரி திரு கோல்டாமெயர் கருத்து தெரிவித்துள்ளார்.

ஜோர்டானுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த முன்வருவீர்களா என்று நிருபர்கள் கேட்டபொழுது, இது ஜோர்டான் மன்னர் ஹுசேனைப் பொறுத்தது. அவர் விரும்பினால் அங்கு போய் பேச்சுவார்த்தைகள் நடத்தத் தாம் தயாராய் இருப்பதாக திருமதி மெயர் கூறினார்.

இதற்கிடையில் ஜோர்டான் மன்னர் ஹுசேன் எகிப்திய அதிபர் நாஸருடன் ஆலோசனைகள் நடத்தியிருக்கிறார். அவர் அமெரிக்காவுக்குப் போகவிருக்கிறார்.

## பிரி. அங்கோலா அருகில் யுத்தக் கப்பல்கள்

லண்டன், மார்ச் 19

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து தானே விலகிக்கொண்டுள்ள பிரிட்டிஷ் அங்கோலாவை நோக்கி இரண்டு பிரிட்டிஷ் கப்பல்கள் விரைந்து கொண்டிருக்கின்றன. நூற்றுக்கணக்கான பாராதுருப்புகளும் விங்கமாண்டர்களும் இந்தக் கப்பல்களில் போய்க்கொண்டிருக்கிறார்கள். அங்கோலாவில் இவர்கள் இறங்குவார்களா என்பது தெரியவில்லை.

தீவில் துருப்புகள் இல்லாவிட்டால் மட்டுமே பேச்சுவார்த்தைக்கு வரமுடியும் என்று அந்தநாட்டுக்கு ஜனதிபதியாகத் தம்மை நியமித்துக்கொண்டிருப்பவர் அறிவித்திருக்கிறார். பிரிட்டிஷ் அங்கோலாவில் ஒரு கமிஷனரை ஏற்படுத்தி அங்கு நிரந்தரமான தீர்வு ஒன்றுக்கு வழிவகுப்பதுதான் தனது நோக்கம் என்று பிரிட்டன் அறிவித்திருக்கிறது.

## கைத்தொழில் பிரதேசம்

வெள்ளவத்தை, புதன்

ஜா-எலையில் உள்ள கார்கள், ஸ்கூட்டர்கள் உற்பத்தி செய்யப்படும் இடமாகிய 'எக்கலை' கைத்தொழிற் பிரதேசத்தின் சகல குடியிருப்புப் பகுதிகளுக்கும் மின்சார விநியோகம், குழாய்நீர்திட்டம் என்பவற்றை வெகு விரைவில்ஏற்படுத்திக்கொடுக்குமாறு குருந்துவத்தை முன்னேற்றச்சங்கத்தினர் பிரதமருக்குக் கடிதம் அனுப்பிவைத்துள்ளனர். துரிதகதியில் முன்னேறிவரும் இக் கைத்தொழில் பிரதேசத்தை நாடிக் காணிகளை வாங்க இப்போது அனேகர் விருப்பம் கொண்டுள்ளனர்.

## வீட்டை உடைத்து திருடினாராம்

வல்வெட்டித்துறை, புதன்

கரவெட்டியைச் சேர்ந்த வல்லிபுரம் சிவயோகநாதன் என்னும் இளைஞன் கதிர்காமத்தம்பி புஷ்பவதி என்பவருடைய வீட்டை உடைத்து ரூபா 810 பெறுமதியான நகைகளை களவாடியதாக பொலிசாரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது மாஜிஸ்திரேட் எதிரியை ரூபா 700 பிணையில் செல்லுமாறும் மீண்டும் இம்மாதம் 24-ந் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டுள்ளார்.

## ஈராக்கிற்கு இடமாற்றம்

வல்வெட்டித்துறை, புதன்

மகியங்கனை காணி அலுவலகத்திலும் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் கீழும் லிகிதராகக் கடமையாற்றி வந்த பருத்தித்துறையைச் சேர்ந்த திரு. சலோது இருதயநாதன் ஈராக்கிலுள்ள பாக்தாத் தலைநகரிலுள்ள இலங்கை தூதரகத்துக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார்

நாவலப்பிட்டி, புதன்

''வெளிநாட்டு குருமார்கள், பெரியார்கள் தங்கள் சமயப் பிரசாரத்திற்காக கீழை நாடுகளுக்கு வந்தபோது எமது நூல்கள், பண்பாடுகள் என்பவற்றையும் எமது சமயம் கூறும் நல்ல தத்துவங்கள் பற்றியும் அறிந்து அவைகளைக் கைக்கொண்டு நமது நூல்களைத் தங்கள் மொழிகளில் பெயர்த்து சிறப்படைந்தார்கள். இதற்கு பல பிறமத குருமார்கள் சான்று. நாமும் முயற்சி தளராது செயல் படத்தலைப்பட்டால் அது எமக்கு வெற்றியையே ஈட்டித்தரும்.''

நாவலப்பிட்டி இந்துவாலிபர் சங்க பொன்விழா இரண்டாம்நாள் நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்துப்பேசிய சங்க ஸ்தாபகரும், ஆரம்ப காலத்தில் பத்து ஆண்டுகள் செயலாளராயிருந்த வருமான திரு. ச. சம்பந்தர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. அ இராஜகோபால் தலைமைதாங்கிய விழாவில் திரு. ச. சம்பந்தருக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

விழாவில் உரைநிகழ்த்திய திரு. இரா. சிவலிங்கம் கூறியதாவது:

இளைஞர்கள் புரட்சிக்காரர்கள், என்பதை கடந்த பல ஆண்டுகளில் பல நாடுகளில் ஏற்பட்ட அரசியல் போராட்டங்கள் எடுத்துக்காட்டுகின்ற அதேவேளையில் நம்மலைநாட்டில் எத்தனையோ சங்கங்கள் தோன்றிமறையும்வேளையில் இந்த இந்து வாலிபர் சங்கம் தமிழுக்கும் சைவத்திற்கும் சேவைசெய்து கொண்டு ஐம்பதாண்டை பூர்த்தி செய்துகொண்டு விழா கொண்டாடுவதே பெரும் புரட்சியாகும்.

''கண்டி நகரம் பன்னிரண்டு நூல் நிலையங்களைக் கொண்டு சிறப்படைந்த அதே வேளையிலும் அங்கு இரண்டே இரண்டு இந்து மத புத்தகங்களைக்கொண்டுள்ளது பெருங்குறையே. இந்து மத நூல்களைப் பரிசளிப்பதின்மூலம் இக் குறையை இந்துவாலிபர் சங்கம் நீக்கமுயலவேண்டும்.''

திரு. அ. சபாபதிப்பிள்ளை, செல்வி எம். தேவகி, செல்வன் எம். கணபதி ஆகியோரும் பேசினர். பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு திரு. அ. இராஜகோபால் பரிசில்கள் வழங்கினார்.

கலைநிகழ்ச்சிகளில் குமாரி லீலா நாராயணனின் பரத நாட்டியம் இடம் பெற்றது. பாலர் பாடசாலைச் சிறுமியரின் புதுவித 'அன்புப்' பாட்டு நிகழ்ச்சியும், கதிரேசன் குமார மகாவித்தியாலய மாணவரின் 'கூற்றம் வென்றகுமரன்' எனும் நாடகமும் நடைபெற்றது.

செயலாளர் திரு. சி. நடராஜா நன்றியுரை வழங்கினார்.

## வாலிபரின் சிரமதானம்

சுழிபுரம், புதன்

பண்ணாகம் தெற்குவிசவத்தனை முருகமூர்த்தி கோவில் வீதிகள் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு திரு. அ. எதிர்வீரசிங்கம் தலைமையில் அவ்வூர் வாலிபர்களால் சுத்தம் செய்யப்பட்டன. சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட வாலிபர்கள் கடந்த ஐந்து தினங்களாக இச்சிரமதான வேலையில் ஈடுபட்டனர்.

## பருத்தித்துறை த. வா. மு. தீர்மானம்

வல்வெட்டித்துறை, புதன்

தமிழரசுக்கட்சியின் வருடாந்த மகாநாட்டுக்குப் பூரண ஒத்துழைப்பு அளிப்பதென்றும் மகாநாட்டு இறுதிநாளில் தமது சார்பில் கலை நிகழ்ச்சிகள் சைக்கிள் ஓட்டப் போட்டி முதலியன நடாத்துவதென்றும் பருத்தித்துறை தமிழரசு வாலிப முன்னணி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. திரு. எம் வேலும்மயிலும் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் பருத்தித்துறை எம். பி, திரு. க. துரைரத்தினம்உட்பட பலர் சமூகமளித்திருந்தனர்.

## பிணையில் சென்றவருக்கு வாரண்

வல்வெட்டித்துறை, புதன்

மாணிக்கம் தம்பையா என்பவர் தனது மனைவி தெய்வானைக்கு ஜீவனாம்சப் பணம் கட்ட குறிப்பிட்ட திகதிக்கு கோர்ட்டிற்கு வர தவறிய குற்றத்திற்காக பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா எதிரியை ரூபா 500 பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு இம்மாதம் 17-ம் திகதிக்கு கோட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டிருந்தார், பிணையில் சென்றவர் குறிப்பிட்ட திகதிக்கு கோர்ட்டில் ஆஜராகத் தவறியதற்காக மாஜிஸ்திரேட் எதிரிமீது வாரண்ட் பிறப்பித்துள்ளார்.

சேர்ந்த கலாஜோதி எஸ். சண்முகநாதன் (சாணு) பேசுகையில் இந்த நிலைக்கு ஆக்கி வைத்தவர் கலையரசராவார். எல்லோரையுமே நல்ல நிலைக்கு ஆக்கவேண்டுமென்ற எண்ணம் கொண்டமையினாலேயே இவ்வளவு காலம் வாழ்ந்து வருகிறார். நாடகத்தில் கட்டுப்பாடு, ஒழுங்கு இருக்கவேண்டுமென்பதை வலியுறுத்திய முதல் பேர்வழி கலையரசராவார்'' என்று கூறினார்.

பதிலுரை வழங்கிய கலையரசு கே. சொர்ணலிங்கம் பேசுகையில், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கலைஞர்கள் வருவதென்றால் ஊசித்துவாரத்தினால் குதிரை வருவது என்று சொன்னகதைபோல ஆகிக்கொண்டிருக்கின்றது. இந்தநிலையில் திரு. டி. கே. பகவதி இலங்கைக்கு வருகை தந்தது போற்றத்தக்கது. கலை கவலையைப் போக்கும். கலை, ஒரு புனிதமானது. இதில் எல்லோரும் புகுந்தால் கலையை மேன்மேலும் வளர்க்கலாம் என்று கூறினார். தமக்கு ஆதரவு அளித்தவர்களுக்கு கலையரசர் நன்றி தெரிவித்தார்.

திரு. டி. கே. பகபதி சிறப்புச் சொற்பொழிவாற்றினார். திரு. கே. பரராஜசிங்

## சிரமதான சிறப்பு

அல்லைப்பிட்டி புதன்

தீவு பகுதி காரியாதிகாரியால் தீவுப்பகுதியின் சகல கிராமங்களிலும் சிரமதான இயக்கக்குழு அமைக்கப்பட்டு வருகின்றது. மண்டைதீவுக்கான இக் குழுக் கூட்டம் சென்ற வெள்ளிக்கிழமை மாலை மண்டைதீவு மகாவித்தியாலயத்தில்தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. எஸ். விஜயலிங்கம் தலைமையில் அங்குரார்ப்பணம்செய்துவைக்கப்பட்டது. தீவுப்பகுதி கிராமவிருத்தி அதிகாரியினால் சிரமதானத்தின் சிறப்புகள் பற்றியும் சேவை பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது.

மண்டைதீவு சிரமதானக் குழு நிர்வாக உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. க. கைலாசபிள்ளை கி. ச. தலைவர். தலைவர்: திரு. நா. தாமோதரம்பிள்ளை கி. மு. சங்க தலைவர். இணைச்செயலாளர்களாக: கிராமசேவையாளர் திரு. க. திருநாவுக்கரசு, மறுமலர்ச்சி இயக்க செயலாளர் திரு. சி. பாலசிங்கம் பொருளாளர்களாக கி. ச. உறுப்பினர்பொ. திருநாமம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்

நிர்வாகக் குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

திறகு அருகாமையில் உள்ள உயிர்பாதுகாப்புச் சங்கத்தைச் சேர்ந்த வீரர் ஒருவர் நீந்திக்கொண்டிருக்கையில் த்துள்ளது. இச் சம்பவத்தையொட்டி பொலிசார் தீவிர புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## முருகன் அசுரரை அழித்ததால் பலாத்காரம்புதிதல்லஎன்கிறார் 'சண்'

வெள்ளவத்தை, புதன்

''எந்த ஒரு பிரச்னைக்கும் போராட்டத்தின் மூலமே தீர்வுகாணமுடியும். சாதிப் பாகுபாடு ஒழிப்புப் பிரச்னையை ஒவ்வொரு கட்சியினரும் ஒவ்வொரு முறையாக ஆராய்கின்றனர். இலங்கை சுதந்திரமடைந்து 21 வருடங்களாகியும், சாதி அமைப்பு ஒழிவதற்கான சட்டம் இயற்றப்பட்டும் இன்னுந்தான் சாதி அமைப்புத் தீரவில்லை. சட்ட மூலம் தீர்க்கலாம் என்று சிலரும் சமாதானம் மூலம் தீர்க்கலாம் என்று சிலரும் சொல்கிறார்கள். பலாத்காரத்தைப் பாவிக்கவேண்டும் என்று நாம் விரும்பவில்லை, ஆனால் பலாத்காரம் தானகவேதலையெடுத்தால் நாம் என்ன செய்யமுடியும்? புராண காலத்தில் அசுரர்களை அழிக்க முருகப்பெருமான் வேல் போன்ற ஆயுதங்களைத் தூக்கிவந்தார் என்று படிக்கிறோம். மாக்ஸ், லெனின் காலத்திற்கு முன்னரேயே நம்மவர்கள் பலாத்காரத்தை உபயோகித்திருக்கிறார்கள். ஆகவே பலாத்காரம் எமக்குப் புதியதொன்றல்ல'

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (பீகிங் சார்பு) யைச் சேர்ந்த திரு. நா. சண்முகதாசன் கொழும்பு செஞ்சிலுவைச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற சாதிப் பாகுபாடு ஒழிப்புக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா தலைமைவகித்த இக்கூட்டத்தில் திரு. என். சண்முகதாசன் தொடர்ந்து கூறியதாவது: தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களும், சுரண்டப்படும் கீழ்த்தர வர்க்கமும் ஒன்றுசேர்ந்து நடாத்தும் ஒரு போராட்டத்தின் மூலமே சாதிப் பிரச்னையை வென்றெடுக்க முடியும், பாராளுமன்றத்தில் முக்கூட்டுக்கமிஷன் கொண்டுவரப்போவதாகச் சிலஅரசியல்வாதிகள் பேசிக்கொள்கிறார்கள், இவ்வளவு காலமும் இப் பிரச்னையைத் தெரியாதவர்கள்தான் கமிஷன் கொண்டுவரமுயல்வார்கள். எம்மைக் கேட்டிருந்தால்கூட நாம் தெளிவாக விளக்கியிருப்போம் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் போராட்டம் மிக வெற்றிகரமானதாக அமையும் என நம்புகிறோம்.''

திரு. கே. டானியல் பேசுகையில், சட்டம் எங்களுக்கு ஒரு பாதுகாப்பையும் வழங்கப்போவதில்லை. திரு. கதிரவேலுப்பிள்ளை எம். பி. மாத்திரம் தீண்டாமைப் பிரச்னை பற்றிய கடிதத்திற்குப் பதில் எழுதியுள்ளார். அவரும் சட்டமூலம் செய்யலாம் என்கிறார். ஆனால் கடந்தகால வழக்குகள் எமக்கு நம்பிக்கையை அளிக்கவில்லை'' என்றார்.

கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா பேசுகையில், ''முன்செய்த கர்மம்தான் ஒருவனைத் தாழ்த்தப்பட்டவன் ஆக்குகிறது என்று சில மதவாதிகள் கூறுவது தவறு. மக்கள்தான் இதற்கு அடிப்படைக் காரணம். மக்கள் மனம் திருந்தவேண்டும். இந்த நீண்டகாலப் பிரச்னை தீரவேண்டும்'' என்றார்.

வழக்கறிஞர் திரு. கரவிட்ட, வித்தியாலங்காரப் பேராசிரியர் திரு. அழகியவன்ன ஆகியோருட்படப் பலர் பேசினர்.

கொழும்புலயனல்வென்ட் தியேட்டரில் வடபகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலைபரம் பற்றிய விளக்கச் சித்திரப்படக்கண்காட்சியும் இடம்பெற்றது.

## இலட்சார்ச்சனை

சுழிபுரம். புதன்

சுழிபுரம்-பறுளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் இலட்சார்ச்சனை நேற்று ஆரம்பமாகியது. தொடர்ந்து ஆறு தினங்கள் நடைபெறும் இந்த இலட்சார்ச்சனை தினமும் மூன்று நேரங்களில் நடைபெற ஏற்படாகவுள்ளன.

## மாடு திருடினர் ரூ. 50 அபராதம்

வல்வெட்டித்துறை, புதன்

அல்வாயைச் சேர்ந்த கே. சுப்பிரமணியம் என்பவர் கிட்டிணன் செல்லத்துரை என்பவருடைய பசுமாடு ஒன்றைக் களவாடியதாகப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே மாஜிஸ்திரேட் எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு ரூபா 50 அபராதம் விதித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

நல்லவை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டும்கூட.. சீர்திருத்த இயக்கங்கள் தோல்வியுற்ருல் அறியாமையே இதற்குக் காரணம்.

— மகாத்மா காந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 7-ந் திகதி
(20 - 3 69)

## மீண்டும் கெடுபிடி

“கள்ளத் தோணி'' என்று நாமம் சூட்டி தமிழர் எவராயிருந்தாலும் எச்சமயத்திலும் கைது செய்து சிறையில் அடைத்து வைத்து தொல்லை கொடுக்கும் பொலிசாரின் கெடுபிடிச் செயல் சிறிது காலம் ஓய்ந்திருந்தது. மீண்டும் இது புதிய உத்வேகத்துடன் ஆரம்பமாகியிருக்கிறது, இதற்கு என்ன காரணம்? சட்ட விரோதக் குடியேற்றம் அதிகரித்திருப்பதாக புள்ளி விபரம் எதுவும் வெளியாகவில்லை. அரசாங்கம் புதிய உத்தரவு ஏதும் பிறப்பித்திருக்கிறதா அல்லது அரசாங்கத்துக்கு தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் அரசாங்கத்துக்கு விரோதமான சக்திகள் இந்தக் கெடுபிடி நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றனவா?

சட்ட விரோதக் குடியேற்றம் நிச்சயம் தடுக்கப்படவேண்டும். சட்ட விரோதமாகக் குடியேறுபவர்களுக்கு நாட்டுப்பற்றுள்ளயாரும் ஆதரவளிக்கமாட்டார்கள். தமிழர் எல்லோரையும் சந்தேகப் பிரஜைகளாகக் கருதுவதும் போதியவிசாரணையின்றி அவர்களைக் கைது செய்து நிர்ப்பந்தப்படுத்தி, அவமானப்படுத்தி தடுப்பு முகாமில் அடைத்து வைப்பதும் அநியாயம். சட்ட விரோதமாகக் குடியேறியவர் என்று சந்தேகிக்கப்படுபவர்களை முன்னர், பொலிசார் விசாரணை செய்து போதிய சான்றுகள் இருப்பின் விடுதலை செய்தும் சான்றுகள் இல்லாவிடில் தடுப்பு முகாமுக்கு அனுப்பியும் வந்தார்கள். ஒரு தடவை கைதாகி சான்றுகள் காட்டி விடுதலை பெற்றவர்களும் கூட மீண்டும் மீண்டும் கைது செய்து துன்புறுத்தப்பட்டனர். இப்பொழுது சட்ட விரோதக் குடியேற்றக்காரர் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் கைது செய்யப்பட்டு எவ்வித விசாரணையுமின்றித்

கிளிநொச்சிப் பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினம் சமீபத்தில் பரந்தனில் ‘கள்ளத்தோணிகள்'' என சிலர் கைது செய்யப்பட்டது சம்பந்தமாக பிரதமருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில்தெளிவாக விளக்கிக் கூறியிருக்கிருர்.

“சட்டவிரோதக் குடியேற்றக் காரரை கைது செய்து வெளியேற்ற வேண்டியது தான் ஆனல் இங்கு தொடர்ந்து வாழத் தகுதியுடைய நாடற்றவர்களைத் துன்புறுத்துவது நீதியாகாது'' என்று தெரிவித்துள்ள கிளிநொச்சிப் பிரதிநிதி, “எவரையும் பிடித்து சிறையிலடைப்பதற்கு முன்விசாரணை செய்து போதிய சான்றுகள் காட்டாதவர்களையே கைது செய்யுமாறு இதற்குப்பொறுப்பான உத்தியோகத்தர்களைப் பணிக்கவும்'' என்று பிரதமரைக் கேட்டிருக்கிருர். மனிதர் சம்பந்தப்பட்ட இவ்விஷயத்தை பிரதமர் மனிதாபிமானத்துடன் கவனிப்பாரென எதிர்பார்ப்போம்,

சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் எனக்கைது செய்யப்பட்டு கொம்பனித்தெருவிலும் தலைமன்னரிலுமுள்ள தடுப்புமுகாம்களில் அடைக்கப்பட்டுள்ளவர்கள் படும் அவஸ்தை கொஞ்ச நஞ்சமல்ல. தலைமன்னர் புடுப்பு முகாமின் நிலை மிக மிக மோசம் உணவு மட்டுமல்ல சுகாதார வசதி சற்றும் கிடையாது. பூலோகத்திலேயே நரக வேதனையை இங்குள்ளவர்கள் அனுபவிக்கின்றனர்.

இதற்கு இலங்கை அரசாங்கம் மட்டுமல்ல இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனும் பொறுப்பேற்கத்தான் வேண்டும். “நான் இந்தியாவிலிருந்துதான் வந்தேன். எனது சொந்த ஊர் இராமநாதபுரம்'' என்று ஒருவர் சொன்னலும் அதற்கான ஆதாரம் பெறுவதற்கு பல வாரங்கள் தாமதமாகிறது. இந்த ஆதாரம் பெறுவதில்

# கடல்கன்னியில் கச்சதீவு பயணம் தந்த சுவையான அனுபவங்கள்

நீல நிறக் கடலை வெண் நுரையாக்கி குறிகாட்டுவானிலிருந்து கடலைக் கிழித்துக்கொண்டு ‘கடல் கன்னி’ தன் வேகத்தைக் காட்டிக் கொண்டிருந்தாள். கடும் வெயிலில் கடலில் மூன்று மணித்தியாலங்களைக் கடந்தால்தான் கச்சதீவு. எல்லையற்ற பரப்புக்கு அதிபதியாக இருக்கும் சூரியன் ஏன் இப்படிக் கொதிக்க வேண்டும்? அவனது கடமையின் கொதிப்பு கடல் கன்னியில் சென்றுகொண்டிருந்த எங்களை சிறிது வாட்டத்தான் செய்தது.

தலையெல்லாம் மூடி மூடி மொட்டாக்குப் போட்டிருந்த என்னையும் எனது சில நண்பர்களையும் பார்த்து ஒரு சிரிப்புச் சிரித்தார் கடல் கன்னி என்ற அந்த இயந்திரப்படகின் ஒரு ஊழியரான நீர்கொழும்பைச் சேர்ந்த சிங்கள இளைஞர் எச். எச். டி. வில்பிரட் கனிஷ்டஸ் அப்புகாமி. ‘என்ன அப்புகாமி அப்படிச் சிரிக்கிறீர்கள்?’ பின்னை என்ன ஒரு நாளைக்குக் கடலில் செல்வதற்கு இத்தனை பயப்படுகின்றீர்களே தினமும் இதில் தொழில்செய்வதாக இருந்தால் எப்படிப் பயப்படுவீர்களோ?’

தமிழர் ஒருவருக்குச் சொந்தமான அந்த இயந்திரப் படகில் கடமையுணர்ச்சியுடன் அரசியல் வாதிகளின் வகுப்புத்துவேஷம் தெரியாமல் தொழில்செய்து வரும் செல்வன் அப்புகாமி தனது சேவைபற்றித்தொடர்ந்தார்.

தமது தொழில்பற்றிக் குறிப்பிட்டுவிட்டு நெடுந்தீவில் அம்மன்கோவில்ஒன்று இருப்பதாகவும் இது சீதா அம்மன் ஆலயம என்று முன் அழைக்கப்பட்டு வந்ததாகவும் அனுமார் வந்திறங்கிய வெல்லை எனுமிடத்தில் 7 கிணறுகள் இப்போது இருப்பதாகவும் இராமாயணத்தின் சில பகுதிகளை அவர் அறிந்த அளவில் தெரிவித்தார். இங்கு வெள்ளிக்கிழமைகளில் பொங்கல் நடைபெறுவதையும் அவர்மூலமாக அறிந்தேன்.

தமிழ்ப் படங்கள் பார்ப்பதுண்டா என்ற என் கேள்விக்கு, எம். ஜி. ஆர். படத்தில் தமக்கு விசேஷ அக்கறை யுண்டு என்பதை வெளிப்படுத்தினர். அவர் அந்தக் கேள்விக்கு அளித்த நீண்ட பதிலை தலைமேல் மிக சமீபமாகப்பறந்த இலங்கை விமானத்தின் சப்தம் புரிந்துகொள்ள முடியாதபடி

யற்றுக் கிடக்கும் கச்சதீவு அந்தோனியார்பெருநாளின் போது அதி முக்கியத்துவம் வாய்ந்த இடமாக மாறிவிடுகிறது. இலங்கையின் முப்படைகளுக்குக்கூட முழு வேலை கொடுத்துவிடுகிறது. கலைக்கப்பட்ட தேன்கூட்டிலிருந்து தேனீக்கள் பறப்பதுபோல் மக்கள் அவசர அலுவல்களால் அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தனர். மாலை 3 மணிக்கு கச்சதீவு சென்றடைந்த நான் நண்பர் ஒருவர் அமைத்திருந்த கூடாரத்தில் ஆறிவிட்டு மாலை நான்கு மணிக்கு கச்சதீவுக்கு இத்தனை மக்கள் வந்திருப்பதற்கான காரணத்தை அறிய முயன்றேன். அந்தோனியார் ஆலயம் சிறியதுதான். அந்த ஆலயத்தின் உட்புறம் தவிர வெளிப் புறத்திலெல்லாம் சிறிய சிறிய கடைகள். பிரார்த்தனை செலுத்திவிட்டவர்கள் வெளியே தமதுகையில் இருந்தவற்றைக் கொண்டு எதையெதை வாங்கலாம் என்ற அங்கலாய்ப்புடன் திரிந்துகொண்டிருந்தார்கள்

கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல கச்சதீவுக்கு வந்திருந்தவர்கள், இந்துக்களும் முஸ்லிம்களும் பௌத்தர்களும் வந்திருந்தார்கள். மொழி மதவேறுபாடின்றி எல்லோரும் சச்சரவின்றிப் பழகுவது வருடத்துக்கொரு முறை இங்கு மட்டும் காணக்கூடிய நல்ல காட்சி.

### எலந்தப்பழமும் இருந்தது

மலர்கள், மாலைகள், மணிகள் கலைச்செறிவுகொண்ட சிறிய சிலைகள். சித்திரசேலைகள். விசித்திர விளையாட்டுப் பொம்மைகள், பாதர் விரும்பும் காதணிகள், கை வளையல்கள், நெஞ்சைக் கவரும் குஞ்சங்கள், நேசம் வளர்க்கும் பலரது படங்கள் இனிக்கும் கரும்புகள், எலந்தப்பழம், தோடம்பழம் இப்படியெல்லாம் சடைகள் பார்ப்பவர் விழியை இழுத்துக்கொண்டிருந்தன. எதை, வாங்குவதென்ற தடுமாற்றம் பலருக்கு ஏற்பட்டது பார்வையில் புரிந்தது.

தாமாகவே அமைத்துக் கொண்ட தற்காலிகக்கடைகளில் வர்த்தகர்கள் சுறுசுறுப்புடன் வியாபாரத்தை நடத்திக்கொண்டிருக்க துப்பறியும் பொலிசாரும் இலங்கை ராணுவத்தினரும் தமது வேலைகளை இரகசியமாகக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். இராணுவத்தினருக்கென ஒரு கூடாரம் இருந்தது. ஆனல் புனித அந்தோனியார் ஆலயத்தின் பின்புறத்திலேயே பொலிசார் ஒதுங்கியிருக்கவேண்டியிருந்தது.

தேவாலயத்தின் ஆராதனையுடன் காணும் சபானவர்கள், காத்து நிற்பவர்கள், விபரமும் தேவாலத்தின் முன்னல் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கி சொலிக் கொண்டிருந்தது. பாதைகள் எல்லாம் எவரது ஆலோசனையும் பெறப்படாது சுதந்திரமாக அமைக்கப்பட்டிருந்ததால் நெருக்கடி அதிகரிந்துக்கொண்டேயிருந்தது.

க கணேசலிங்கம்

சுமார் மூன்று மைல் சுற்றளவுள்ளகச்சதீவில் சென்ற 15 ம் திகதி இரண்டாயிரத்துக்குமதிகமானேர் தேங்கி நின்றனர். இலங்கையில் யாழ்ப்பாணம், சிலாபம், நீர் கொழும்பு, மன்னர் ஆகிய இடங்களிலிருந்தும் பாரதத்தின் தெற்கிலுள்ள ராமேஸ்வரத்திலிருந்தும் இவர்கள் வந்திருந்தார்கள்.

### சுகாதாரம் காக்க எவருமில்லை

சட்டத்தைக் கவனிக்க எத்தனையோ பாதுகாவலர்கள் காத்து நின்ருர்கள். ஆனல் சுகாதாரம் பாதுகாக்க ஒருவருமில்லை. பால் கட்டிவிட்டால் போதும் கழிவுப்பொருள்களை ஒருவர் தலைமீது போட்டால் கூட அவருக்கு நோய் வராது என்ற அளவுக்கு நமது சுகாதார நம்பிக்கை வளர்ந்திருப்பது வரவேற்கத்தக்கதே

சந்தேகக் கண்ணேட்டம் வளரும்பொழுது அடிப்படைத்தேவைகளை மறந்து போய்விடுவது சகஜம்தான். பாரதத்திலிருந்தும் இரகசியப் பொலிசார் உத்தியோக உடையின்றி வந்திருந்ததாகக் கேள்விப்பட்டேன். மக்கள் சுகாதாரத்துக்கு யார் பொறுப்பு? மக்கள் இல்லாமல் நிலமும் சட்டமும் இருந்து என்ன பயன்?

கச்சதீவில் அம்மன் ஆலயம் ஒன்று இருப்பதாக அறிந்தேன். வேடிக்கைகளில் மட்டுமே மனம் லயித்துவிடும் போது ஆலயத்தை நினைக்க நேரமில்லாமல்போய் விடுகிறது.

சீராக கட்டிய ஆலயங்கள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. திறந்திருக்கும் ஆலயங்களை மக்கள் திரும்பிப் பார்ப்பதில்லை. இறைவனுக்கு நல்ல வேடிக்கை காட்டுகின்ருன் மனிதன்.

தென் இந்தியாவிலும் சினிமா நட்சத்திரங்களுக்கு அங்குள்ளவர்கள் அளவு மீறிய மதிப்பு கொடுத்து இதில் அதிக நேரத்தையும் செலவிடுகிருர்கள் போலத்தான் தெரிகிறது.

படக்கடைகளில் சினிமா நட்சத்திரங்களின் படங்களுக்குத்தான் மவுசு அதிகம் என படக்கடைக்காரர் ஒருவர் தெரிவித்தார் மேல் நாடுகளில் சினிமா நட்சத்திரங்களின் படங்கள் வீடுகளின் ஹோலை அலங்கரிப்பதில்லை.

பொழுது போக்கு சாதனம் பொழுது விடிந்தால் பொழுது போகுமளவுக்கும் நிற்கும் சாதனமாக மாறிவிட்டதால் மக்களின் உழைப்பு திசை திருப்பப்பட்டிருக்கிறது. எந்த நடிகர் உயர்ந்தவர் என்பதில் கச்சதீவுக்குள்ளும் சிறிது சச்சரவு ஏற்பட்டது.

சச்சரவுகளுக் கெல்லாமே இந்த பத்திரிகைக் காறன் தான் காரணம் என்று என் பக்கத்தேயிருந்த ஒருவர் பேசியது காதுக்கு கேட்டது. ‘கச்சதீவு விஷயத்திலும் காரணம் ‘அவன்’ தான்’ என்று தமது கருத்தை வலுப்படுத்தினர் அவர். கச்சதீவு சென்று திரும்பி விட்டேன் இதற்கான பதில் இன்னமும் எனக்கு தெரிய வில்லை நீங்கள் சொல்லுங்கள் யார் காரணம்?

## ஐயாறன் எழுதுவது

நாற்பது வருடங்களுக்கு முன் பொள்ளாச்சியிலே காலவர் நாடகம் நடந்ததாம். காலவரிஷி கங்கையிலே நின்று இருகைகளிலும் நீரை எடுத்து அர்ச்சியம் விடுகிருர். அச்சமயம் விமானத்தில் சென்ற கந்தர்வனை டி. கே. சண்முகம் வெற்றிலையை குதம்பித் துப்புகிருர். அது ரிஷியின் கையிலுள்ள நீரில் விழுகிறது. கோபத்துடனே ரிஷி யாரது என்று மேலே பார்க்கிருர்.

மிக நெருக்கடியான அந்த கட்டத்தில் சபையிலிருந்தவர்கள் ‘கொல்’ என்று சிரித்துவிட்டனர். மேடையில் நடித்தவருக்கு முதலில் ஒன்றும் தெரியவில்லை. நாடகம் நடக்கிறது. மீண்டும் மக்கள் சிரிப்பு. பின்னர் தான் விஷயம் புரிந்து திரை விழுகிறது. நடந்தது என்ன தெரியுமா?

மேலே சென்ற விமானத்தின் ஆணியொன்று ரிஷியின் டோபாவுடன் சிக்கி, அதை மேலே கொண்டுசென்றுவிட்டது. மொட்டைத் தலையுடன் ரிஷி நிற்கிருர். உணர்ச்சிவேகத்தில் காலவரிஷுக்கு இது தெரியவில்லை. பின்னர் விஷயம் தெரிந்ததும் நடிகர்களுக்குப் பெருந்திகைப்பாகிவிட்டதாம். ருசியான இந்த சம்பவத்தை நடிகர் பகவதி நேற்று, பலாலியிலுள்ள ராமநாதன் கனிஷ்ட பல்கலைக்கழக மாணவ மாணவிகள் கூட்டத்தில் நாடகக்கலையைப் பற்றிப் பேசுகையில் தெரிவித்தபோது, எல்லோரும் குலுங்க குலுங்கச் சிரித்தனர்.

0 0 0

சென்ற ஜனவரியில்தான் அந்த கனிஷ்ட பல்கலைக்கழகம் ஆரம்பமாயிற்று. பத்திரிகைத் தொழில் பயிற்சி பெறும் மாணவ மாணவிகளின் அழைப்பின் மீதே பகவதி அவர்கள் அங்கு சென்று பேசினர். 15 பேர் இந்தப் பயிற்சியைப் பெறுகிருர்கள். இளமையும் அறிவும் உற்சாகமுமுள்ள அவர்களைக்கண்டதும், ஈழத்திலே தமிழ்ப்பத்திரிகைகள் சிறப்பாக வளருமென்ற நம்பிக்கை ஏற்பட்டது.

கல்கத்தாவிலே நாடகக் கலை வளர்ச்சிக்காக ஒரு தனி சர்வ கலாசாலையே நடப்பதாயும், நாடகத்தின் பல பல அம்சங்களிலும் அங்கு பயிற்சி அளிப்பதாயும், அண்ணாமலை பல்கலைக் கழகத்திலும் இதற்கான

விசேஷ வகுப்பு நடத்த அறிஞர் அண்ணா முயற்சித்ததாயும், அவர் தெரிவித்து ஈழத்திலும் பல்கலைக்கழகத்தில் நாடகக் கலைப் பயிற்சி அளிக்கவேண்டுமென்ருர். ராமநாதன் கனிஷ்ட பல்கலைக்கழகம் இதற்கான ஒழுங்கு செய்யுமா?

செவிக்கான விருந்து முடிந்தபின், அறுசுவை உண்டியுமளித்தனர். அம் மாணவ மாணவிகள். அதிகாலை 4 மணிக்கே எழுந்து அவர்களே சமைத்தார்களாம்! நம்பமுடியவில்லை. முதல்நம்பர் சமையல்காரர் சமைத்ததுபோலவே ஒவ்வொன்றும் ருசியாக இருந்தது. சமையலும் ஒரு முக்கிய கலைதானே. அதற்காக (நமது முறையில்) சமையல் வகுப்புகள் நடத்தி ‘டிப்ளமா’ அளிப்பதாயின் அது மிகவும் பயன்படுவதாக இருக்கும். அன்று சமைத்த பத்திரிகை வகுப்பு மாணவிகள் அனைவருக்கும் இப்போதே சமையலுக்கான முதல்தர ‘டிப்ளமா’ பத்திரம் அளிக்கலாம்.

0 0 0

பகவதி அவர்களை அம் மாணவிகள்சுற்றிக் கொண்டு பல கேள்விகள் கேட்டனர். கடைசியான ஒருவர், “இப்போது எம். ஆர். ராதா என்ன செய்கிருர்'' என்று குறும்புத்தனமான கேள்வி கேட்டதும், பகவதி உள்ளிட்டு எல்லாரும் சிரித்துவிட்டனர்.

அங்கு மொத்தம் இப்போது 90 பேர் பயிற்சிபெறுகிருர்களாம். ஒரு வகுப்பு அறையில் ஆசிரியர் இல்லாவிடினும், எவ்வித சந்தடியும் செய்யாமல், மாணவ மாணவிகள் அமைதியாக இருந்தது வியப்பளித்தது.

இதுபற்றி அதிபரிடம் கூறிப் பாராட்டியபோது, தமது மாணவ மாணவிகளெல்லாரும் பண்பானவர்களென்றும், அவர்களால் எவ்வித பிரச்னையுமில்லை என்றும் பெருமையுடன் சொன்னர். யாழ்ப்பாணத்தில் ஒரு பூரண பல்கலைக்கழகமாக அது வளர முடியுமா என்று கேட்டதற்கு, அவர் ஒரு சிரிப்பால் பதிலளித்தார்.

கூட்டத்துக்கு தலைமை வகித்த கலையரசு அவர்கள், ‘தாய்மார்களே’ என்று கூறியதும், அங்கிருந்த மாணவிகள் உள்ளிட்டு எல்லாரும்

# ஈழத்தின் சம்பந்த முதலியார் கலையரசு சொர்ணலிங்கம்

(ஔவை டி. கே. சண்முகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிம் வந்தார்கள். ஒரு தடவை கைதாகி சான்றுகள் காட்டி விடுதலை பெற்றவர்களும் கூட மீண்டும் மீண்டும் கைது செய்து துன்புறுத்தப் பட்டனர். இப்பொழுது சட்ட விரோதக் குடியேற்றக்காரர் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் கைது செய்யப்பட்டு எவ்வித விசாரணையுமின்றித் தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனரென்றும் இவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டு தெரியாத மொழியில் எழுதப்படும் முறைப்பீடுகளில் கையொப்பம் இடுமாறு வற்புறுத்தப் படுகிறளென்றும் இது அடிப்படை உரிமைகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கும் மாறுன செயலென்றும்

றுள் இந்தி வர்த்தைமும் நம் பொறுப்பேற்கத்தான் வேண்டும். 'நான் இந்தியாவிலிருந்துதான் வந்தேன். எனது சொந்த ஊர் இராமநாதபுரம்'' என்று ஒருவர் சொன்னாலும் அதற்கான ஆதாரம் பெறுவதற்கு பல வாரங்கள் தாமதமாகிறது. இந்த ஆதாரம் பெறுவதில் கூட ஊழல் நிலவுவதாகப் புகார். இந்திய ஹைகமிஷன் சிறிது சுறுசுறுப்பாக இயங்கினால் தடுப்பு முகாமில் அந்த ஏழை மக்கள் வேதனையடைய வேண்டியதுமில்லை; அந்நடிக்கைகளைத் இந்தியநாட்டை இழிவுபடுத்த வேண்டிய அவசியமும் இராது.



# ஆசிரியருக்கு கடிதங்கள்

## நாவலர் காட்டிய வழி

சட்டக் கல்லூரி இந்து மாணவ மன்ற ஆண்டு விழாவில் உபசபா நாயகர் ஆற்றிய பேருரையை ஈழநாடு (12. 3. 69) இதழில் படித்து மகிழ்ந்தோம். ஆறுமுக நாவலர் சாதி வித்தியாசம் பாராட்டப்படுவதை ஆதரித்து இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். பெரிய புராண வசனத்தில் நாவலர் பெருமான் சைவர்கள் பாராட்டவேண்டிய சாதி ஐந்தெனக் காட்டியுள்ளார். சிவஞானிகள் முதற் சாதி; சிவயோகிகள் இரண்டாஞ் சாதி; சிவக்கிரியாவான்கள் மூன்றும் சாதி; சிவசரியாவான்கள் நாலாஞ் சாதி. இந்நெறிகளில் வராதவர்கள் பஞ்சசாதி. நாவலர் பெருமான் தனியடியார் அறுபத்து மூவரில் வேளாள வருணத்தைச் சேராதவர் ஐம்பது பேர் என அட்டவணைப் படுத்தியுள்ளமை உபசபாநாயகர் உரைக்கு அணி செய்வதாகும்.

குருலிங்க சங்கம வழிபாட்டைப் போற்றுவது நமது சற்சமயமாகிய சைவசமயமாகும். ஆகவே அவ்வழி ஒழுகுகின்ற சைவர்கள் யாபேரும் முதற் சாதியைச் சேர்ந்தவர்களேயன்றி வேறல்லர் என்பது நாவலர் பெருமான் கண்டமுடிபும் கொண்ட முடிபுமாகும் நாவலர் நம் சைவ நெறிக் காவலர் அவர் வாக்கு அருள்வாக்கு. அவ்வழி நாம் ஒழுகுவோமாக.

க. கணபதிப்பிள்ளை
யாழ்ப்பாணம்

## ஏன் யோசிக்கவில்லை?

அரசாங்கம் இலங்கையில் சிங்கள திரைப்படத் தொழிலை முன்னேற்றுவதற்காக மிக விரைவில் தமிழ்ப் படங்களின் வெளியீடு கட்டுப்படுத்தப்படுமென பத்திரிகை செய்தி கூறுகிறது.

இச் செய்தி உண்மையானுல் தமிழ் மக்களாகிய நாம் துக்கப்பட வேண்டியதுமட்டுமல்லாமல் எமது மொழி எவ்வளவு கீழ்த்தரமான நிலைக்குத் தள்ளப்படுகின்றது என்பதை உணர்ந்து கொள்ளப்பட வேண்டியவர்களாகிறேம்.

சிங்களத் திரைப்படத் தொழிலை விருத்தி செய்ய வேண்டுமென நினைத்த அரசாங்கம் ஏன் எமது நாட்டில் தயாராகும் தமிழ்திரைப் படத்தொழிலை முன்னேற்றுவதற்கு யோசிக்கவில்லை. எமது ஆட்சி மன்ற உறுப்பினர்கள் இவ் விஷயத்தில் கவனம் செலுத்தி தமிழ்திரைப்படத் தொழிலையும் முன்னேற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

ந அருட்செல்வம்
கோண்டாவில்

## ஏற்றுமதி அதிகரிப்பு

திருக்கோணமலையிலிருந்து சென்றமாதம் 12,800 தொன்னுக்கும் மேலான தேயிலை ஏற்றுமதியாக்கப்பட்டிருக்கின்றது. இதுதவிர சிமெந்து, பசளை போன்றவைகள் அதிகளவு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

பதுண்டா என்ற என் கேள்விக்கு, எம். ஜி. ஆர். படத்தில் தமக்கு விசேஷ அக்கறையுண்டு என்பதை வெளிப்படுத்தினுர். அவர் அந்தக் கேள்விக்கு அளித்த நீண்ட பதிலை தலைமேல் மிக சமீபமாகப்பறந்த இலங்கை விமானத்தின் சப்தம் புரிந்துகொள்ள முடியாதபடி செய்துவிட்டது.

குறுகிய இனபேத மற்று உழைப்பையும் சேவையையும் பெரிதென மதித்து வாழும் அந்த இளைஞரின் அறிவு நமது இலங்கை அரசியலுக்கு பயன்படாது. இதைப் பயன்படுத்திஞல் பின் அரசியலில் வெற்றி பெறுவதெப்படி?

முப்படையில் ஒரு படையைச் சேர்ந்த விமானம் பறந்ததன் பின் கடற்படையி கப்பல் நம் படகுக்கு அருகில் கண்காணிப்பை செலுத்தியது.

'அடேய்' என்ற தமிழ்வார்த்தையை எவ்வளவு கச்சிதமாக நமது காவற்படையினர் சிலர் கற்றுவைத்திருக்சின்றனர் என்பது கச்சதீவுப் பயணத்தின்போதுதான் தெளிவாகத் தெரிய வந்தது. அதுவும் தமிழர்களைக் கண்டுவிட்டால் இந்த வார்த்தையைச் சொல்லி அழைப்பதில் அவர்களுக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி! ஆட்சிமன்றத்திலுள்ளவர்களும் இந்தத் தமிழ்ச்சொல் பற்றி கேள்விப்படுவது நல்லது.

நமது கடற்படையினரின் பெரிய கப்பலான 'கஜபாகு' கச்சதீவுக்கரையில் அணி செய்து கொண்டிருந்தது. 'இதோ கச்சதீவு' வந்துவிட்டது இறங்குங்கள் என்ருர் அப்புகாமி, இதிலா இறங்குவது? பிராயணிகளின் கலக்கக்குரல்ஏக காலத்தில் ஒலித்தது, சிரித்த அவர் 'பயப்படாமல் இறங்குங்கள்' என்ருர். தலையில் எம்முடன் கொண்டுவந்த பொருட்களை வைத்துக்கொண்டு படகிலிருந்து இறங்கிஞேம். முழந்தாளுக்கு மேல் கடல்நீர் எங்களை வருடியது. கரையில் கட்டப்பட்டுக் கிடந்த சுமார் ஐம்பது படகுகளுடன் எங்கள் படகும் கட்டப்பட்டது. நாங்கள் கச்சதீவுக் கரை சேர்ந்தோம். கரைக்கு சிறிது உள்ளே பல கூடாரங்கள். அதற்குள் தங்கியிருந்தவர்கள் போக மிகுதிப்பேர் அங்குமிங்குமாக யார் யாரையோ தேடிக்கொண்டு அலைந்து கொண்டிருந்தார்கள்.

யாத்திரை, சந்திப்பு பாவனைக்குத் தேவையான பொருள்கள் வாங்குவதற்கான ஒருவித சந்தை இவ்விதம் மூன்றுவிதமாக கச்சதீவு விளங்குகிறது. சந்தடி

# ஈழத்தின் சம்பந்த முதலியார் கலையரசு சொர்ணலிங்கம்

(ஔவை டி . கே . சண்முகம்)

**கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் 80-வது நிறைவு விழாவிற்கு திரு. டி. கே. சண்முகம் எழுதியனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தி இங்கு முழுவதுமாகத் தரப்படுகிறது.**

ஈழத்தின் கலை அரசன் அவர்களின் முத்து விழாவிலே கலந்து கொள்ளும் பேறு எனக்குக்கிடைக்கவில்லை என்றுலும் என் இளவல் திரு. பகவதி அவர்கள் கலந்துகொள்வதால் ஆறுதல் பெறுகிறேன். கலையரசர் அவர்களைப் பற்றி எண்ணிய போது பல ஆண்டுகளுக்கு முந்திய நினைவுகள் எனக்கு வருகின்றன.

1964-ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மகாஜனக் கல்லூரி கண்காட்சிக்கு நான் வந்திருந்தேன். திரும்பியபோது யாழ்ப்பாணம் விமானத்துறையில் என்னை வழியனுப்பவந்திருந்த ஆசிரியர் திரு. ராஜா அரியரத்தினம் அவர்கள் அமைதியோடு ஆசனத்தில் அமர்ந்திருந்த ஒரு பெரியாரைச் சுட்டிக்காட்டி 'இவர்தான் எங்கள் ஈழநாட்டின் நாடகக்கலை அரசர்' என்று பெருமிதத்தோடு அறிமுகப்படுத்தினுர். அன்று அரை மணி நேரம் தாம் அப்பெரியாரோடு உரையாட முடிந்தது

பல மாதங்களுக்குப் பிறகு நாங்கள் இலங்கைக்குச் சென்று நாடகங்கள் நடித்த போது அப்பெரியார் நாங்கள் தங்கியிருந்த விடுதிக்கு வருகைதந்து எங்களை அன்புடன் வரவேற்று வாழ்த்திஞர். எங்கள் நாடகங்களுக்கும் விஜயம் செய்து மனமாரப்பாராட்டிஞர். யாழ்ப்பாணத்திற்கு நாங்கள் வந்த போது தமிழகத்தின் பழம் பெரும் நடிக நடிகையர் பலர் தங்கியிருந்து விருந்துண்ட அவரது இல்லத்திற்கு எங்களையும் அழைத்துச்சென்று விருந்தளித்து மகிழ்ந்தார். அப்பெரியார் தாம் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள்.

'கலையரசு' என்றுல் அது ஈழநாட்டில் சொர்ணலிங்கம் ஒருவரைத் தாம் குறிக்கும். அந்த அளவுக்கு ஈழத்து மக்களின் நன்மதிப்பைப்பெற்றவர் அவர்.

நாடகக்கலை, கலையரசு அவர்களுக்குப் பரம்பரையாக வந்தசொத்து. 1901 ம் ஆண்டு முதலே கலையரசர் அவர்களுடைய இல்லம் தமிழ் நாடகக்கலைஞர்களுக்குத் தாய்வீடாக இருந்தது. கலையரசர் அவர்களின் தந்தையாருக்கும் தமிழ் நாடகத் தலைமை ஆசாளுக விளங்கிய சங்கரதாஸ் சுவாமிகளுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. கலையரசு அவர்கள் சங்கரதாஸ் சுவாமிகளின் நல்லாசியினைப்பெற்றவர். அந்த நாளில் சென்னை சுகுணவிலாச சபையார் இலங்கைக்கு வருகைபுரிந்த போது நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்தமுதலியார் அவர்கள் சபையின் பிரதம நடிகராகவும் ஆசிரியராகவும் விளங்கினர். சுகுணவிலாச சபையின் நாடகங்கள் இலங்கைத் தமிழர்களை வெகுவாகக்கவர்ந்தன. நாடகங்களை முடித்துக்கொண்டு அவர்கள் சென்னைக்குத் திரும்பிய பொழுது இளைஞராகவிருந்த சொர்ணலிங்கத்திள் இதயத்தையும் கவர்ந்து சென்றனர். பேராசிரியர் சம்பந்த முதலியார் அவர்களின் திருவுருவம் இளைஞர் சொர்ணலிங்கத்தின் இதயத்தில் அழியாத ஓவியமாகப் பதிந்துவிட்டது.

சபையார்போனதிலிருந்து சொர்ணலிங்கத்திற்கு சரியான உறக்கமில்லை. பம்மல் சம்பந்த முதலியாரின் 'மனோகரனும்' 'லீலாவதி' சுலோசனவும், 'வாணீபுர வணிகனும் அவர்கனவிலே வந்து நடமாடத் தொடங்கினர். இரண்டாண்டுகள் இவ்வாறு ஏக்கத்திலேயே கழிந்தன. 1913-ம்ஆண்டில் சுகுணவிலாசசபையார் மீண்டும் இலங்கைக்கு வந்தார்கள் அவர்கள் வருகையைக் கேட்டதும் சொர்ணலிங்கத்தின் உள்ளத்தில் சேர்வு நீங்கியது. அப்போது முதலியார் அவர்களின் முன்னிலையிலேயே இலங்கை சுபோத விலாசசபையின் திறப்புவிழாவும் நடைபெற்றது. இதற்காக இளைஞன் சொர்ணலிங்கம் பட்டபாடு கொஞ்சமல்ல. சுபோத விலாச சபை 1915-ம் ஆண்டு முதல் இலங்கையின் பல பகுதிகளிலும் நாடகங்களை நடிக்கத் தொடங்கியது. பெரும்பாலும் பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகங்களே நடிக்கப்பெற்றன. மனோகரா, வேதாளஉலகம், வாணீபுர வணிகன் முதலிய நாடகங்கள் சுபோதவிலாச சபைக்கு மகத்தான புகழைத் தேடித்தந்தன. கலைஞர் சொர்ணலிங்கம் மனோகரன்' தத்தன், ஷைலக் ஆகிய வேடங்களில் நடித்து மிகச் சிறந்த குணசித்திர நடிகரென்று எல்லோராலும் புகழப்பெற்ருர்.

ஒரு சமயம், 'பாதுகா பட்டாபிஷேகம்' நடத்துவதாகத் திட்டமிடப்பட்டது. எல்லோருக்கும் பாடங்கள் கொடுக்கப்பட்டன. கூனி மந்தரையாக நடிக்க ஒருவரும் முன்வரவில்லை, இதனுல் நெருக்கடிஏற்பட்டது. அந்த சமயம் ''நானே கூனியாக நடிக்கிறேன்'' என்று ஒரு குரல் கம்பீரமாக ஒலித்தது. கலைஞர் சொர்ணலிங்கம்தான் அவ்வாறு கூறிஞர். அவர் ஏற்கனவே எடுத்துக்கொண்ட வேடம் பரதன் பாகம். நாடகம் நடைபெற்றபோது கூனியாக நடித்தவர் யார் என்று சபையோரால் கண்டுகொள்ள இயலவில்லை. கூனியும் பரதனும் வேறும்பால் வேற்றுமையான பாத்திரங்கள் மட்டுமின்றிப் பருவ வேறுபாட்டையும் காட்டி நடிக்கவேண்டிய பாத்திரங்களல்லவா? இரு வேடங்களையும் ஒருவரே புனைந்தார் என்று அறிவித்தபோது சபையோர் நம்ப மறுத்தார்கள். இதன் பிறகு கலைஞர் சொர்ணலிங்கத்தின் புகழ் ஈழநாடு முழுதும் பரவியது. மேல்நாட்டுக் கலைஞர்கள் சிலர் முன்னிலையில் அவர் கூனியாக நடித்து அவர்களை வியப்பில் ஆழ்த்திவிட்டார்.

1953-ல் ஈழநாட்டுக்கலாரசிகர்கள் அனைவரும் கூடிய ஒரு பெருவிழாவில் கலைஞர் சொர்ணலிங்கத்திற்குக் கலையரசு என்ற பட்டமும் பொற்பதக்கமும் வழங்கப் பெற்றன.

நாங்கள் இலங்கைக்கு விஜயம் செய்த போது கொழும்பு நகரில் பத்து சங்கங்கள் கூடி எங்களுக்கு வரவேற்புத்தந்து பாராட்டிய ஒரு பெருவிழாவில் கலையரசர் அவர்களின் நடிப்பைக் காணும் நற்பேறு எங்

[illegible] நம்பிக்கை ஏற்பட்டது.

கல்கத்தாவிலே நாடகக் கலை வளர்ச்சிக்காக ஒரு தனி சர்வகலாசாலையே நடப்பதாயும், நாடகத்தின் பல பல அம்சங்களிலும் அங்கு பயிற்சி அளிப்பதாயும், அண்ணாமலை பல்கலைக் கழகத்திலும் இதற்கான

சளுக்குக்கிடைத்தது சைலக் பிரபுவாக பழமையில் ஊறித் திளைத்த யாழ்ப்பாணப் பகுதி குடிமகனாகவும் நடித்துக் காட்டி எல்லோரையும் திகைப்பில் ஆழ்த்திஞர். தமது 66-வது வயதில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் நடிப்பிலே காட்டிய ஆர்வத்தையும், உற்சாகத்தையும்கண்டு எங்கள் நடிகநடிகையர் அனைவரும் புதிய உணர்வுபெற்றனர். ஏகலைவன் எவ்வாறு துரோணுச்சாரியர் உருவத்தைவழிபட்டு வில்வித்தை பயின்ருஞே அவ்வாறே கலைதரன் நாடகப் பேராசிரியர்பம்மல் சம்பந்த முதலியார் அவர்களைத்தமது இதயக்கோவிலில் வைத்து வழிபட்டு நடிப்புக் கலை பயின்ருர்என்றுசொல்ல வேண்டும்.

குருவைப் போலவே சீடன் என்பதில் சிறிதும் ஐயமில்லை. எண்பதாண்டு நிறைவினைப் பெறும் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களை ஈழப் பெருநாட்டின் சம்பந்தத முதலியார் என்றே சொல்லலாம். தமிழ்நாடக வளர்ச்சியில் குன்ருத ஆர்வமுடைய கலையரசு அவர்களும் அவர்கள் குடும்பத்தாரும் பல்லாண்டுகள்வாழ எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா

மலாயன் டிஸ்பென்சரி அதிபர் திரு சுப்பிரமணியத்தின் மனைவியும், தங்கரெத்தினம், பாலசரஸ்வதி, சந்திரியாதேவி, பாலச்சந்திரன் ஆகியோரின் தாயாரும், சி. வி. இராசசுந்தரம் (றேடியோ சிலோன்), ஜி. மஞேகரன் (கே. ஜி. இண்டஸ்றீஸ்), திருமதி சரோஜினி பாலச்சந்திரன் ஆகியோரின் மாமியாருமாகிய **திருமதி இராசம்மா அவர்கள்** காலமாகிவிட்டார். அன்னரது பூதவுடல் ஈமக்கிரியைக்காக இன்று (20-3-69) நல்லூர் 31, செட்டித்தெரு இல்லத்திலிருந்து பகல் 2 மணிக்குச் செம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். 1301

[illegible] என்று கேட்டதற்கு. அவர் ஒரு சிரிப்பால் பதிலளித்தார்.

கூட்டத்துக்கு தலைமை வகித்த கலையரசு அவர்கள், 'தாய்மார்களே' என்று கூறியதும், அங்கிருந்த மாணவிகள் உள்ளிட்டு எல்லாரும் சிரித்துவிட்டனர். ஆனல் அங்கு பல குழந்தைகள் பெற்ற தாய்மார்களும் பயிற்சிபெறுவதாகவும் அதிபர் தெரிவித்தார். சின்னப் பெண்களையும், ''அம்மா, தாயே'' என்று அழைக்கும் பண்பு தமிழகத்தில் சில பகுதிகளில் உண்டு.

0 0 0

திரு பகவதி, பலாலியிலிருந்து விமானமூலம், கொழும்புக்குப் பயணமானுர். விமான நிலையத்தில் பலர் அவரை அன்புடன் வழியனுப்பி வைத்தனர். 'ராஜ ராஜசோழன்' நாடகத்தை ஈழத்தில் வந்து நடிக்க வேண்டுமென்ற ஆவல் தங்களுக்கு இருப்பதாக ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் தெரிவித்தார். அந்த விருப்பம் சீக்கிரத்தில் நிறைவேற வேண்டும்.

0 0 0

நாடக மாடிட 'நந்தி சேச்சுர' மாகாளேச்சுர நாகேச்சுர நன்கான, கோடீச்சுரங் கொண்டீச்சுரந் திண்டீச்சுரங் குக்குடேச்சுர மக்கீச்சுரங்கூறுங்கால், ஆடகேச்சுர மகத்தீச்சுர மயனீச்சுர மத்தீச்சுரஞ் சித்தீச்சுர மந்தண்கானல், ஈடுதிரை இராமேச்சுர மென்றென்றேத்தி இறைவனுறை சுரம் பலவும் இயம்புவோமே.

— அப்பர் அடிகள்

## தேவை

ஜி.சி.ஈ விஞ்ஞானபாடம் படித்த வாலிபர்கள் பேர்னஸ் அற்றென்டனுக (Fur. ace Attendant) பயிற்சி பெறத்தேவை. சிறிய தொகை பிணைப்பணம்கட்ட வேண்டும் இம்மாதம் 27 - 31-ம் திகதிக்குள்நேரில் வரவும். சேவி (Xavy) கண்ணுடித்தொழிற்சாலை, கோப்பாய். 778

உடைந்த வெள்ளைக் கண்ணுடிதொகையாகத்தேவை சேர்த்து அனுப்பக்கூடியவர்கள் தொடர்புகொள்ளவும். சேவி (Xavy) கண்ணுடித் தொழிற்சாலை, கோப்பாய். 779

இப்பத்திரிகை. ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org